# தொண்டன்

ஆரம்பம்: 1969–பெப்ரவரி



எங்கள் பெயரால்
ஊர்வலங்கள் வேண்டாம்
கூட்டமும் வேண்டாம்
கொண்டாட்டமும் வேண்டாம்
**PROGRAMME** களும் வேண்டாம்
**PROJECT** க்களும் வேண்டாம்
ஒரு வேளை
உங்களுக்கு இவைகள்
தேவையாக இருக்கலாம்!
ஆனால்,
எங்களுக்குத் தேவை
அமைதியான, ஆரோக்கியமான
பாதுகாப்பான, மகிழ்ச்சியான
வாழ்வு தருவீர்களா?

செப்டம்பர் - ஒக்டோபர் - 05

15/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்


செப்டம்பர்- ஒக்டோபர் - 2005

மலர்-37 இதழ்-06



ஆசிரியர்

J.A.G. இரட்ணகுமார்

இணை ஆசிரியர்

மலர்வேந்தன்

துணை ஆசிரியர்கள்

மெற்றில்டா இராஜேந்திரம்

பெஸ்லீயோ வாஸ்

ஸ்ரான்லி பிரபாகரன்



வெளியீடு

சமூகத் தொடர்பு நிலையம்.

திரு/ மட். மறை மாவட்டம்

முகவரி

சமூகத் தொடர்பு நிலையம்

அ.பெ.எண் - 44

மட்டக்களப்பு

SOCIAL COMMUNICATIONS CENTRE

P.O. BOX - 44

BATTICALOA.

TEL: 065 - 2226486

விலை - 15/=

ஆண்டு சந்தா : 250/=

ஆறுமாதச் சந்தா : 130/=

(தபாற்செலவு உட்பட)


# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 01 |
| உடைத்தலும் பகிர்தலும் | - | 02 |
| இலக்கிய மஞ்சரி | - | 04 |
| தண்டித்து வீடுங்கள்.... | - | 05 |
| மாணவர் பக்கம் | - | 06 |
| ஐக்கியத்துக்கு வழி ஏது? | - | 07 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 08 |
| மறை அறிவை வளர்ப்போம் | - | 10 |
| நூல்களின் அழகு | - | 11 |
| திரு/மட் மறை மாவட்ட.... | - | 12 |
| தேர்தல் - சமாதானம் | - | 14 |
| மனக்கோலம் | - | 16 |
| கதை சொல்லுங்கள் | - | 18 |
| வன்முறையற்ற.... | - | 20 |
| முக்கனிகளில் சிறந்த மாங்கனி | - | 22 |
| விவிலியம் கற்போம் | - | 23 |
| அறிவை வளர்ப்போம் | - | 24 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்புடன் உங்களோடு...

மட்டக்களப்புப் பிரதேசத்தில் தினமும் ஏதோவோரிடத்தில் கொலையும், குண்டு வீச்சுகளும் இடம் பெறுவது வாடிக்கையாகிவிட்டது இதைச் செய்பவர்கள் யார்? தெரியவில்லை!

ஏன் செய்கிறார்கள்? தெரியவில்லை!

கொல்லப்பட்டவர்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள்பற்றிக் கூட பல்வேறு வதந்திகள், தெளிவில்லை. ஒன்றுமட்டும் தெரிகிறது. விடுதலைப் போராளிகளுக்குள் மோதல்கள் ஏற்பட்டு எதிரும் புதிருமான பின்புதான் இவை அதிகரித்துள்ளன. இவை ஏட்டிக்குப் போட்டியான செயல்களா? அல்லது ஏற்பட்ட துரதிர்ஷ்ட வசமான சூழ்நிலையைப் பயன்படுத்தி வஞ்சகர்கள் செய்யும் சதியா?

எப்படியிருப்பினும் இத்தகைய ஒரு பயங்கர சூழ்நிலை ஏற்படுவதற்கு இடம் கொடுத்தவர்கள்தான் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும் மாலையாகி விட்டால் சாலைகளை விட்டு வீடுகளுக்குச் சென்றுவிட வேண்டுமென்ற தவிப்புத்தான் பலரிடமும் காணப்படுகிறது.

ஆள்மாறி... அடையாளம் தெரியாது... ஏதாவது ஆகிவிட்டால் என்ன செய்வதாம்!

விடியலைத் தேடிப் புறப்பட்ட தமிழ் மக்களின் போராட்டம் விடியலையும் காணாது விடியலுக்கு வழியையும் காணாது அந்தரித்து நிற்கின்ற கட்டத்தில் இத்தகைய அவலச் சாவுகள் மக்கள் மத்தியில் பீதியையும் வெறுப்பையுமே தோற்றுவிக்கின்றன.

இதைத்தான் கொலையாளிகள் எதிர்பார்க்கிறார்களோ என்னவோ?-

இலங்கை அரசியலில் இனவாதமும், மதவாதமும் புதிய விஷ்வரூபமெடுத்து தம் கோர முகங்களைக் காட்டிக் கொக்கரித்து நிற்கின்ற இவ்வேளையில் சொந்தச் சகோதரர்களைக் கொன்றொழிக்கும் அல்லது அதற்குத் துணைபோகும் இந்தப் பாதகச் செயல் வேண்டாமே.

விடுதலையும், சுதந்திரமும், சுயநிர்ணய உரிமையும் எதற்கு? நமது மக்கள் வளமோடும் மகிழ்வோடும் வாழத்தானே! ஆனால் நாம் - நம்மால் - நமக்குள் செத்தழிவதென்றால்

நெஞ்சுப் பொறுக்கு தில்லையே -
இந்த நிலை கெட்ட மனிதரை நினைக்கையிலே!

– இணை ஆசிரியர் –



## இறைவாக்கு

நீங்கள் ஒருவரை ஒருவர் கடித்து விழுங்குவதை நிறுத்தாவிட்டால் ஒருவரால் ஒருவர் அழிக்கப்படுவீர்கள்.

எச்சரிக்கை!.

*கலாத்தியர் 5:15*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைத்தலும் பகிர்தலும்

இந்த நற்கருணை ஆண்டிலே, நற்கருணையின் உள்ளார்ந்த அர்த்தத்தைப் புரிந்து கொண்டு, அதற்குகந்தபடி வாழ்வதே நாம் வாழ தம்மைத் தந்த, நமக்காகத் தன்னையே முழுமை யாக அர்ப்பணித்த இறைமகன் கிறிஸ்துவுக்கு நாம் கூறும் நன்றியாக இருக்க முடியும்.

நற்கருணைக்கு எத்தனையோ அர்த்தங்கள் இருக்கக்கூடும். ஆனாலும் அவற்றுக்குள் மேலானதொன்றாக அமையக் கூடியது அதில் அடங்கியுள்ள உடைத்தலும், பகிர்தலுமாகத்தான் இருக்க முடியும். நற்கருணையை உருவாக்கிய இரவிலே இயேசு இதைத்தான் செயலில் காண்பித்தார். “இதோ இதை என் நினைவாகச் செய்யுங்கள்” என்று அப்பத்தைப் பிட்டு சீடர்களிடம் கொடுத்த பிறகுதான் வசனம் உரைக்கிறார்.



ஆம், முதலில் அப்பத்தை உடைக்கிறார். பின்னர் அவர்களுக்காக அதைக் கொடுக்கிறார்.

குறித்த அந்த இரவில், நற்கருணையின் மூலமாகத் தம்மை அவர் மண்ணின் மக்களுக்காக ஒப்படைக்கவும், கீலம் கீலமாக்கப்பட்டு உருவழிக்கப்படவும், மரணத்தின் கொடுமையை அனுபவிக்கவும் இருப்பதை அவர் தனது இத்தகைய செயல்களின் மூலம் உணர்த்துவதை அதானிக்க முடிகிறது.

பல கோதுமை மணிகள் உடைவதில்தான் அப்பம் உருவாகிறது. இந்த அப்பம் உடலுக்குள் உடைந்து சிதைவடைவதில்தான் அது சமிபாடாகி உடலுக்கு வலுவாகின்றது.

எனவே நற்கருணையின் அடிப்படையே உடைதல் என்றவாறாக அமைவதை நாம் காண்கிறோம். இந்த உடைதலின் தொடர்ந்தேச்சியாக அமைவது பகிர்தல். மொத்தத்தில் நற்கருணையில் உள்ள பிரதான செயற்பாடுகளான உடைதலும், பகிர்தலும் பிறருக்காக வாழ்வதில் அவசியமான பங்களிப்பாக அமைகின்றன. அப்பம் முழுமையாக இருக்கும் வரை அதனால் பலன் கிட்டுவதில்லை. அதுபோல நம்மை முழுமையாக வைத்துக் கொண்டு, அடுத்தவரை நேசித்து வாழ்வதென்பது நடக்க முடியாததொன்று. நம்மை விட்டுக் கொடுத்தும் - சில சமயங்களில் இழந்தும் வாழாதவரை நம்மால் பிறரையும் அவர் மூலமாக இறைவனையும் சேவித்து வாழ முடியாது.

அதனால்தான் நம்மை உடைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. எமது தனித்துவத்தை, எம் முழுமையை, எம் கொள்கைகளை, பிடிப்புக்களை, ஆசாபாசங்களை நாம் உடைத்துக் கொள்ள வேண்டும். எம் சுயநலத்தை, நாம் ஆர்வத்தோடு பேணி வரும் நலங்களை, எம் சிந்தனை சொல் செயல்களை கொஞ்சமாவது விட்டுக் கொடுக்காதவரை எம்மால் அடுத்தவருடன் சோந்து வாழ முடியாது. அப்படியிராதவரை அடுத்தவர்காக வாழ்வதென்பதுமட்டும் சாத்தியமாக முடியாது.

நம்மை முற்றுமுழுதாக வைத்துக் கொண்டு, கொஞ்சமும் குறையாமல் பார்த்துக் கொண்டு, பிறருக்காக வாழமுற்பட்டால் அதில் நாம் தோற்றுப்போய்விடுவோம்.

எனவேதான் அயலவருக்காக நாம் வாழ்வதென்பது எம் இயல்பிலே ஒரு மாற்றத்தைப் - பெரும்பாலும் ஒரு குறைவை ஓர் இழப்பை ஏற்படுத்தும் செயலாகிறது. ஓர் உடைவை அது எமக்குத் தருகிறது.

அடுத்தவரோடு நாம் எதையும் பகிர்ந்து கொள்ளாதவரை அவர்களை அன்பு செய்கிறவர்களாக நாம் இருக்கமுடியாது. குறைந்த பட்சம் நம் அன்பினாலாவது ஒரு பகிர்தலைச் செய்ய வேண்டித்தானே இருக்கிறது?

தமது அன்பைப் பகிர்ந்து கொள்ள முன் வருபவர்கள், தாம் அன்பு செய்பவருக்காக இழப்புக்களை - உடைவைத்தாங்க என்றுமே தயங்குவதில்லை.

கிறிஸ்து நம்மை அன்பு செய்தார் - அதுவும் முழுமையாக அன்பு செய்தார். அந்த அன்பின் வேகத்தால் தம்மையே உடைத்துக் கொண்டார், இழந்தார்.

இந்த அன்பை அடி நாதமாகக் கொண்ட ஆதித் திருச்சபையைத்தான் அன்பியமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவிக்க எம்மில் பலரும் முயல்கின்றனர். ஆனாலும் கிறீஸ்துவின் அன்பின் முழு வெளிப் பாடான நற்கருணை நமக்குச் சொல்லித் தரும் வாழ்வை நாம் வாழும்போதுதான் - அதாவது, நம்மை உடைத்துப் பிறருடன் பகிர்ந்து கொள்ளும்போது தான் நாம் அன்பியமாக மாறுகிறோம் என்பதுவே உண்மை!

ஒரு குடும்பத்திலே கணவன் தன் குடும்பம் வாழ உழைப்பினால் தன்னை உடைத்துக் கொள்கிறான். அதில் காணும் நன்மையை குடும்பத்திற்காகப் பகிர்ந்து கொள்கிறான்.

மனைவியோ தன் அன்புப் பணியினால்.... குடும்பத்தில் கணவன் பிள்ளைகளுக்கான தன் அயராத அர்ப்பணிப்பால் உடைகின்றாள். அதன் நன்மையை குடும்பம் பகிர்ந்து கொள்கிறது. அவளது விட்டுக் கொடுப்புகள் குழந்தைகளுக்கு நலம் சேர்க்கிறது.

பிள்ளைகள் பல சந்தர்ப்பங்களில் குடும்ப நிலைமையை மனதிருத்தி தம் ஆசைகளை, தாம் விரும்புபவற்றை விட்டுக் கொடுக்கின்றனர். அதனால் வரக்கூடிய நன்மை குடும்பத்தில் பகிரப்படுகிறது.

அன்பு அடி நாதமாக அமைகிற வாழ்வில் - குடும்பத்தில் - நற்கருணை வாழ்வான உடைதலும், பகிர்தலும் முழுமையான செயற்பாடாக அமைகிறது.

இங்கு உடைதலிலும், பகிர்தலிலும் தயக்கமிருப்பதில்லை. தியாகம் இருக்கும் அதனால் அங்கு சோர்வு இருப்பதில்லை. வாழும் வேகம் இருக்கும்.

. ஆனந்தா A .G. இராஜேந்திரம்

# மழை வருமா!

*சமாதான முன்னெடுப்புப் போல்*
*அட்டகாசமான*
*இடி மின்னல்*
*விளம்பரத்துடன்*
*அவசரமாய்*
*கருமேகத்தில் சூல்கொண்டு*
*'இந்தா, அந்தா' என்று*
*ஆலாவர்ணம் பண்ண,*

*அவசர அவசரமாய்*
*கழுவிய உடைகள்*
*காயவில்லையென*
*நடுவறையில் கொடிகட்டி*
*உலரப்போட்டு,*
*ஓட்டிடைவெளி*
*ஒழுக்கிற்கு*
*ஓட்ட ஓடிசல்*
*பாத்திரம் வைத்து,*
*அடுப்பெரிக்கத் தேவையென*
*வேலிக்கடைத்துவைத்த*
*கம்பு தடி*
*சேர்த்தெடுத்து,*
*கணப் பொழுதில்*
*கனவேலை முடித்தெடுக்க,*
*கடைசியில்*
*எங்கோ போய்*
*கடலில் பெய்யும்*
*அந்த மழை*

*எல்லோரும்*
*மழையைச் சினந்து கொள்ள*
*பாட்டி மட்டும்*
*பாடிச் சொல்வாள்*
*'மேல் காத்து*
*நிக்குது போல' என்று*

*என்றாலும்*
*காத்திருக்கிறோம்...*

*வெயில் குடித்து வளரும்*
*பாறைகள்*
*கிணற்றை மூடுமுன்.....*
*மிகச் செழித்த மரங்கள்*
*பல*
*கருகு முன் .....*
*உழவடித்த வயல்கள்*
*சில மனங்களை விட*
*மிக இறுகு முன்....*

*காற்றைக்*
*கழுவிக் கடந்து,*
*மஞ்சள் இலைகளுக்கெல்லாம்*
*பச்சை நிறம் பூசிவிட்டு,*
*பூமி*
*தொட்டு நனைத்து,*
*எங்கள்*
*இதயம் குளிரவைக்கும்*
*அந்த*
*வானம் தெளிக்கும்*
*கண்ணாடித் துண்டுகளுக்காய்*
*காத்திருக்கிறோம்.*

A. அமல்ராஜ் -
மூதூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

## ஆழியோன்

உலகின் எந்த மொழியினை எடுத்துக் கொண்டாலும், அம்மொழியின் இலக்கியங்கள் மிகவும் முக்கியமானவை. குறிப்பிட்ட மொழியின் தொன்மை, கலை, கலாசாரப் பாரம்பரியங்களின் தன்மைகளை வெளிக்காட்டும் ஊடகமாக இலக்கியங்கள் காணப்படுகின்றன. எனவே இலக்கியங்கள் எப்போதும் பாதுகாக்கப்பட வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தமட்டில், இலக்கிய வெளியீடுகள் பாதுகாக்கப்படும் இடங்களில், தேசிய சுவடிகள் திணைக்களத்தின் சுவடிகள் காப்பகம், இலங்கையின் தேசிய நூலகம், பேராதனைப் பல்கலைக்கழகம் என்பன முக்கிய இடம் வகிக்கின்றன.

இலங்கையின் வெளியீடுகள் தொடர்பான சட்டங்களின்படி, இலங்கையில் வெளியிடப்படும் ஒவ்வொரு வெளியீட்டினதும் ஐந்து பிரதிகள், அச்சகத்தாரால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட வேண்டும். இவை அவர்களால் சுவடிகள் காப்பகம், தேசிய நூலகம், பேராதனைப் பல்கலைக்கழகம் என்பனவற்றிற்கு வழங்கப்படும். முன்னர் ஒரு பிரதி பரித்தானியாவுக்கு அனுப்பப்பட்டது. இன்னொன்று தேசிய நூதன சாலைக்கு வழங்கப்படும்.

இலங்கையின் தமிழ் இலக்கிய வெளியீடுகள் மேற்படி இடங்களில் பாதுகாக்கப் படுவது மிகவும் குறைவாகவே உள்ளது. இவற்றிற்குக் காரணம் ஒப்பீட்டளவில் தமிழ் இலக்கிய வெளியீடுகள் மிகவும் குறைவாகவே காணப்படுவதுடன், இவ்வெளியீடுகளின் ஐந்து பிரதிகள் அச்சகத்தாரால் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு வழங்கப்படாமல் விடப்படுவதும் ஆகும். குறிப்பாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வெளியிடப்படும் இலக்கிய ஆக்கங்கள் ஆவணப்படுத்தாமல் விடப்படுகின்றமையால் அச்சகத்தாரும் இது தொடர்பாகக் கவனம் எடுப்பதில்லை போலும். இது தவிர தமிழர் தாயகப் பகுதியிலும்பாரிய சுவடிகள் காப்பகம் ஒன்று அமைக்கப்படுவது அவசிய தேவையாக உள்ளது. அத்துடன் தமிழ் நாட்டில் (தென்னிந்தியா) பதிப்பிக்கப்படும் இலங்கையர்களின் நூல்களும் மேற்படி சட்டத்திற்குள் உள்வாங்கப்படாமையால் ஆவணப்படுத்தல் தவிர்க்கப்பட்டுள்ளது.

இவை தவிர நூலகங்களும், இலக்கியங்களை ஆவணப்படுத்தும் பணியினை மிகச் சிறிய அளவில் செயற்படுத்தி வருகின்றன. அத்துடன் அவற்றின் பணிகள் இலக்கியங்களை வாசகர்களிடம் சென்றடைய வைப்பதும் ஆகும். எனவே நூலகம் ஒன்றில் தகவல்கள் ஒழுங்கமைக் கப்படுவது மிகவும் அவசியம். இங்கு தகவல்கள் என்பது நூல்கள், ஆவணங்கள் உட்பட நவீன இலத்திரனியல் வெளியீடுகள் என்பனவற்றைக் குறித்து நிற்கின்றது.

இதற்காக உலகின் அறிவுகள் பத்து பெரும்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு இலக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 000 | - | பொது (General Works) |
| 100 | - | தத்துவம் (Philoshphy) |
| 200 | - | சமயம் (Religion) |
| 300 | - | சமூக விஞ்ஞானங்கள் (Social Science) |
| 400 | - | மொழி (Language) |
| 500 | - | தூய விஞ்ஞானம் (Pure Science) |
| 600 | - | தொழிநுட்பம் (Technology) |
| 700 | - | நுண்கலைகள் (The Arts) |
| 800 | - | இலக்கியம் (Literature) |
| 900 | - | புவியியல், வரலாறு, பிரயாணம், வாழ்க்கைச்சரிதம் (Geography, History, Travel and Biography) |

பின்னர் இவை ஒவ்வொன்றும் உபபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இவை சம்பந்தமான பூரண அறிவை ஒவ்வொரு நூலகரும் பெற்றுக்கொண்டிருக்க வேண்டும். அத்துடன் வாசகர்களும் இவை தொடர்பான ஓரளவு அறிவினையாவது பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான் தகவல்களை இலகுவாகப் பெற இயலும்.

ஆனால் இவை சம்பந்தமான அறிவினைப் பெற்றுக்கொள்ள பலரும் அக்கறை காட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதில்லை. இப்போது நூலக விஞ்ஞானம் என்பது கலாநிதிப்பட்டம் வரை செல்கின்றது.

குறிப்பு:-

2005 யூன் மாதத் தொண்டனில், இலக்கிய மஞ்சரி 'தமிழர் உற்பத்தி' என்னும் தலைப்பில் இடம்பெற்றிருந்தது. அதற்குத் தன்னுடைய கருத்துக்களை வாகரைவாணன் 2005 யூலை - ஆகஸ்ட் இதழில் வெளியிட்டிருந்தார். அதன் தலைப்பு - எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்...? அவருக்கு எனது நன்றிகள்.

'தமிழர் உற்பத்தி' யில் குறிப்பிடப்பட்டிருந்த கருத்துக்கள் எனது கருத்துக்கள் என்ற கருத்துப்பட வாகரைவாணன் குறிப்பிட்டிருந்தார். அதில் உள்ள கருத்துக்கள் எதுவும் என்னுடைய தில்லை என்பதும், அவைகள் தமிழக அறிஞர், பேராசிரியர் தெய்வநாயகம் அவர்களினதும் பழந்தமிழர் சரித்திரம் என்னும் நூலினதும் கருத்துக்கள் என்பதும் வாசிக்கும் எவருக்கும் புரிந்திருக்கும்.

# தண்டித்து விடுங்கள் இழிவுபடுத்தாதீர்கள்



"தவறுகள் திருத்தப்பட வேண்டியவை மாறாக நியாயப்படுத்தப்பட வேண்டியவையல்ல". தெரிந்து கொண்டு யாருமே தவறு செய்வதில்லை. தெரியாமல் செய்த ஒன்று என அறிந்த போது அத்தவறினை செய்ததற்காக மெய்யாகவே மனம் வருந்தி அத்தவறு மீண்டும் வாழ்க்கையில் ஏற்படாமல் இருக்க வழிவகை செய்ய வேண்டுமே ஒழிய எக்காரணத்திற்காகவும் நீங்கள் செய்தது தவறு என அறியும் பட்சத்தில் அதனை நியாயப் படுத்தி அதிலிருந்து தப்புவதற்கான வழிவகை களில் ஒரு போதும் ஈடுபடாதீர்கள். ஏனெனில் நீங்கள் செய்தது தவறு என்று உங்கள் மனசாட்சிக்குத் தெரியும். அதுவே நாளெல்லாம் உங்களைக் கொன்று கொண்டிருக்கும்.

தவறிழைத்த ஒருவர் திருந்தி வாழ்வதற் கான வழிமுறைகளில் ஒன்று தவறிழைத்தவர்க ளுக்கு வழங்கப்படும் தண்டனை. இத்தண்டனை, செய்யும் தவறுகளைப் பொறுத்து வேறுபடுகின்றன. ஆனால் எம்மில் பலர் தவறு செய்தவர்களுக்குத் தண்டனை வழங்குவதோடு விட்டு விடுவதில்லை. அவர்களைச் சொல்லாலும் செயலாலும் குத்திக் காட்டி இழிவு படுத்துகின்றனர். இந்நிலைமை மாற வேண்டும். அவர்கள் செய்த தவறுக்காக மனம் வருந்தும் சந்தர்ப்பத்தில் அவர்களின் மனதை மேலும் வருத்துவது வருத்தத்திற்குரிய செயல். தயவு செய்து உங்கள் சிறிது நேர சந்தோசத்திற்காக அடுத்தவரைத் துன்புறுத்தாதீர்கள்.

அவர்கள் செய்த தவறுகளை ஒரு நேரம் நாமே செய்துவிடக்கூடிய சந்தர்ப்பம், சூழ்நிலை அமையலாம். அப்பொழுது நாம் செய்த தவறுக் காக வருந்துவதோடு தவறிழைத்தவர்களை இழிவு படுத்தியமைக்காகவும் வருத்தப்பட வேண்டி யிருக்கும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உங்களை அவ்விடத்தில் நிறுத்தி சிந்திப்பீர்களானால் அடுத்தவரை அலட்சியப் படுத்தும் மனநிலை எம்மிடம் இருக்காது. தயவுசெய்து அடுத்தவனும் மனசுள்ள மனிதன் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள்.

எனவே தவறு செய்தவர்களை மன்னித்து விடுங்கள். அது உங்கள் கடமை. அவர்களை இழிவு படுத்த எக்காலத்திலும் நினையாதீர்கள். அதற்கு ஒரு போதும் உங்களுக்கு உரிமை கிடையாது. இயேசு கூறியதை எப்போதும் ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். பாவிப் பெண்ணின் மேல் குற்றம் சுமத்தி கல் எறிய வந்தவர்களை நோக்கி "உங்களில் பாவம் இல்லாதவன் முதலில் இவள் மேல் கல் எறியட்டும்" என்றார்.


ஆகவே மற்றவர்களின் மேல் குற்றம் சுமத்து முன், அவர்களை இழிவுபடுத்துமுன் உங்களையும் சிறிது எண்ணிப்பாருங்கள். குற்றம் செய்தவர்க்கு தண்டனை கொடுக்க வேண்டுமென்றால் மன்னியுங்கள்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாணயம் செய்து விடல்"

**திரு.A. சால்ஸ் சலமன்**
**வாழைச்சேனை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பிதாப்பிதாக்கள் காலம்

(ஆதி: 12-50)

பிதாப்பிதாக்கள் வரிசையில் முதலிடம் பெறுபவர் ஆபிரகாம். பிதா எனும் சொல் ஒரு சாதியாரின் தந்தையைக் குறிக்கிறது. அந்தவகையில், ஆபிரகாம் இங்கு யூத இனத்தின் தந்தையாகக் கருதப்படுகிறார். பிதாப்பிதாக்களில் நீடிய வரிசையில் ஆபிரகாம், ஈசாக், யாக்கோப்பு, யோசேப்பு, மோயீசன் போன்றோர் அடக்கப்படுவர். கிறிஸ்தவர்கள், யூதர்கள், முஸ்லீம்கள் அனைவரும் ஆபிரகாமைத் தங்கள் தந்தையாகக் கருதுவது குறிப்பிடத்தக்கதாகும். இதில் மோயீசன் இறுதிப் பிதாவாகக் கருதப்படுகிறார்.

பரிசுத்த வேதாகமத்தில் வரலாறானது ஆபிரகாமின் அழைப்புடனேயே ஆரம்பமாகிறது. ஆதியாகமம் முதல் 11 அதிகாரங்களும் வரலாற்றிற்கு முற்பட்ட காலமாகவும், ஆதியாகமம் 12ம் அதிகாரத்திலேயே வரலாறு தொடங்குவதாயும் கூறப்படுகிறது.

ஆபிரகாம் நேரடியாய் இறைவனால் அழைக்கப்பட்டவர். மேலும், வாக்குறுதிகள் பல கொடுக்கப்பட்டு இஸ்ராயேல் இனத்தின் தந்தையாகவும் மதிக்கப்பட்டவர். விசுவாசத்தின் தந்தை எனவும் மக்களால் போற்றப்பட்டவர். கடவுளுடன் இவர் கொண்டிருந்த உறவின் நிமித்தம் தந்தை ஆபிரகாமின் கடவுள் என்றழைக்கப் படுகிறார்.

இவர் கி.மு 1900 - 1800 வரையான காலப்பகுதியில் மொசப்பத்தேமியாவில் உள்ள "ஊர்" எனும் பட்டணத்தில் பிறந்து வளர்ந்தவர். இவர் தந்தை பெயர் தேராகு. மனைவி பெயர் சாராள். இவர்கள் செமெடிக் இனத்தவர்கள். நாடோடிகளாய், ஆடுமாடுகள் மேய்த்து சீவனம் பண்ணியவர்கள். 'ஊர்' நகரம் வீழ்ச்சியுற்றது. போருக்கும், பூசல்களுக்கும் உள்ளாக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் தேராகுவின் மகன் ஆபிராம், அவர் மனைவி சாராயி, சகோதரன் மகன் லோத்தையும் அழைத்துக்கொண்டு ஊரில் இருந்து புறப்பட்டு கானான் தேசம் நோக்கி நடந்து, காரானில் குடியேறினர்.

இங்கு தந்தை தேராகு இறக்கின்றார். பபிலோனிய ஆட்சி இங்கும் பரவியது. வாழ்க்கையும் கஷ்டமாகியது. இக்காலகட்டத்திலேயே ஆபிரகாமிற்கு இறைவனிடம் இருந்து அழைப்பு வந்தது. ஆபிரகாம் மந்தைகளை மேய்த்துக் கொண்டிருக்கையில் இறைவனால் நேரடியாய் அழைக்கப்பட்டார். "நீ உன் நாட்டையும், உன் இனத்தையும், உன் தந்தை வீட்டையும் விட்டு நாம் காட்டும் நாட்டிற்குச் செல்வாயாக"(ஆதி 12:1) உடனே ஆபிராம் தன் மனைவி சாராயியையும் தன் சகோதரன் லோத்தையும் அழைத்துக்கொண்டு தன் உடைமைகளையும், சொந்தங்களையும், ஊரையும் விட்டு, இறைவன் காட்டிய முன்பின் அறியாத நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றார்.

இவ்வேளையில் தங்களின் சுமேரியப் பழக்கவழக்கங்கள், அவர்களின் குலதெய்வங்கள், பபிலோனிய அரச சட்டங்கள் முதலியவற்றையும் தங்களுடன் எடுத்துச் சென்றனர். மேலும், இறைவனால் அழைக்கப்பட முன், ஆபிராம் பல தெய்வங்களை வணங்குபவராகவும், பல சமுதாயப் பழக்க வழக்கங்களில் ஊறியவராயும் காணப்பட்டார். இத்தகைய ஒருவரைத்தான் இறைவன் ஒரே இறைவனை வழிபட அழைத்து புதுப்பித்துக் கொண்டார். சிறிது சிறிதாகப் பழைய பின்னணியில் இருந்து பிரித்துப் பக்குவமுள்ளவராக்கினார்.

ஆரம்பத்தில் ஆபிராமின் வாழ்க்கையில் பல ஒழுக்கக்கேடுகளைக் காணக்கூடியதாய் உள்ளது. பொய், வஞ்சகம், கொலை, பல மனைவிகளுடனான தொடர்பு, பல தெய்வ வழிபாடு போன்ற பல குறைகள் இவர் வாழ்வில் நிறைந்து காணப்பட்டன. இத்தகைய ஓர் ஒழுக்கக் குறைவான மனிதனையே இறைவன் தனக்கெனத் தேர்ந்து எடுத்து ஓர் இனத்தின் தந்தையாகவும், உலகமே போற்றும் விசுவாசத்தின் எடுத்துக்காட்டாகவும், காலப் போக்கில் ஓர் உயர்ந்த வரலாறு படைக்கும் மனிதனாகவும் மாற்றிக் கொண்டார். இவரே ஆதிப் பிதாக்கள் வரிசையில் முதலிடம் பெற்றவராய்க் காணப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கியத்துக்கு வழி ஏது...?

**- யாழ் ராதவல்லி -**

இன்று உலகம் கிறிஸ்துவைத் தேடுகின்றது. பிளவடைந்து, துண்டாக்கப்பட்டுள்ள திருச்சபைகள் அவரை உலகிற்குக் காட்டமுடியாமல் துடிக்கின்றன. இயேசுவால் ஒரே மந்தையாகவும், அவயவங்களாகவும் ஆரம்பத்தில் உருப்பெற்று இருந்த திருச்சபை இன்று ஏன் பிளவுபட்டுள்ளது என்கின்ற வினாவை நாம் ஒவ்வொருவரும் எழுப்ப வேண்டும். இயேசுவானவர் "என் நாமத்தினாலே எதைக் கேட்டாலும் கடவுள் உங்களுக்கு அதை அருளுவார்" எனக் கூறினார்.

ஆனால், இயேசு தந்தையைப் பார்த்து திருச்சபைகள் யாவும் ஒன்றாய் இருக்க வேண்டுமென மன்றாடிய மன்றாட்டுக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை. எனவேதான் உலகம் இயேசுவைக் காண முடியாது திண்டாடுகிறது. திருச்சபைகள் ஒன்றிணைவதன் மூலம் மாத்திரமே இயேசு கடவுளால் அனுப்பப்பட்டார் என்பதை உலகம் கண்டறியவும், நாம் கடவுளின் சீடர்கள் என்பதை பிறமதத்தவர் உணர்ந்து கொள்ளவும் உதவியாக அமையும்.

இன்று பிரிவடைந்துள்ள திருச்சபை பிளவுபட்டுள்ள எமது தேசத்திற்கு ஐக்கியத்தின் செய்தியை எவ்வாறு எடுத்துக் கூறமுடியும்? எனவே நாம் ஒன்றிணைவதன் ஊடாகவே ஏகோபித்த குரலில் அன்பு - நீதி - சமாதானம் - ஒப்புரவாக்கல் முதலிய விழுமியங்களுக்காக எம்மால் போராட முடியும். அதனூடாகவே எமது நற்கனிகளை பிறர் ருசி பார்க்கவும் திருச்சபை இறையரசின் விழுமியங்களை தன்னகத்தே தாங்கிக்கொள்ளவும் இயலுவதாகும்.

எனவே நாம் பிறரின் குற்றங்களைக் கூர்ந்து அவதானிக்காமல் எமது குற்றங்களை நாம் கண்டு கொள்ளவும் அதற்காகப் பிற திருச்சபைகளிடமும், பிறமனிதர்களிடமும் மன்னிப்பைக் கேட்கவும், அழைக்கப்படுகின்றோம்.

# உயிரே! உயிரே!!

- R. தேவகுமாரி -

உயிரே... உடலில் நீ எங்கிருக்கின்றாய்?
உன் பிறவியின் நோக்கம்தான் என்ன...?
உனக்குப் பிடித்த உடலில் புகுந்தாயா?
கடவுளின் கட்டளைக்குக் கருக்கொண்டாயா?
மனிதன் காயப்படும் போதெல்லாம் வேதனை
உடலுக்கு மட்டுமா? உயிரே உனக்கும்தானா...?
தோல்வியடைந்தால் உயிரே நீ உடலில்
இருப்பது சுமையென்று விஷம் அருந்துகையில்
உனக்குக் கசந்ததா?
எத்தனையோ ஞானிகளையும் விஞ்ஞானிகளையும்
பூமிக்கு வரவிடாமல், கருவிலேயே சிதைக்கையில்
சிறு உயிரே உனக்கு வலித்ததா...?
உயிரே உன் பலமும் கவசமுமான தூய ஆவியை
மனிதம் தராதபோதெல்லாம்
தீமையால் நீ கொள்ளையடிக்கப்பட்டாயா?
இரத்த வெறியர்க்கு நீதான் வருமானமா?
உயிரே உன் அனுபவத்தில் இன்னும் மனிதப்
பிறவி வேண்டுமென்று ஆசைப்பட்டதுண்டா?
அஃறிணையே மேல் என்று ஆண்டவனிடம்
முறையிட்டதுண்டா?
நரகம் சென்ற உயிரே ஏன் சிரிக்கின்றாய்?
உனை அந்நிலைக்கு ஆளாக்கிய உடல்
புழுதிக்குள் புழுக்களால் அரிக்கப்படுகின்றதென்றா?
மோட்சம் சென்ற உயிரே ஏன் அழுகின்றாய்...?
உனைப் புனிதமாய் வழியனுப்பிய உடலுக்கும்
புழுக்களின் ஆக்கிரமிப்புத்தான் என்றா...?
உயிரே உனக்கே உருவமில்லை.... உன்னால்
ஊசலாடும் மனிதர் மட்டும் சாதி, குலம்
உண்டென ஏன் சொல்கிறார்கள்...?
உயிரே நீதான் பரிசுத்தத்திற்கும் ஊனியல்பிற்கும்
காரணமா? இது மெய்யெனபதால் தானோ
இயேசுவின் இரண்டாம் வருகையில்
உனக்கெனத் தீர்ப்புக் காத்திருக்கிறது...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இம்முறை "தொண்டனின் சில நிமிடங்களுக்காக" கிறிஸ்ரோபர் பாரதிராஜ் பிள்ளை அவர்களை சந்தித்தோம். இவர் இலங்கை டென்னிஸ் சம்மேளனனத்தின் (SLTA) தேசிய ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றும் துடிப்பான இளைஞர். மட்டக்களப்பைச் சேர்ந்த இவர், புதூர் உப தபாலதிபரும், பிரபல சமூக சேவையாளருமான ஜோர்ஜ்பிள்ளை அவர்களின் புத்திரர் ஆவார். பாரதி அவர்களைக் கொழும்பில் உள்ள 'இலங்கை டென்னிஸ் சம்மேளனத்தின் தலைமையகத்தில் சந்தித்தோம்.

**:- நீங்கள் இலங்கை டென்னிஸ் சம்மேளனத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளராகக் கடமையாற்றுகின்றீர்கள். இலங்கை டென்னிஸ் சம்மேளனம் என்றால் என்ன? தேசிய ஒருங்கிணைப்பாளர் என்ற ரீதியில் உங்களின் பணி என்ன?**

:- இலங்கையில் கிரிக்கட் விளையாட்டிற்கு 'கிரிக்கட் கட்டுப்பாட்டுச்சபை' எப்படிக் காணப்படுகின்றதோ, அவ்வாறே டென்னிஸ் விளையாட்டிற்கு 'இலங்கை டென்னிஸ் சம்மேளனம்'. இதன் கீழ்த்தான் ஏனைய டென்னிஸ் கழகங்கள் இயங்க முடியும். அவற்றைக் கட்டுப்படுத்தும் முழு அதிகாரமும் இலங்கை டென்னிஸ் சம்மேளனத்தைச் சார்ந்தது. இதில் எனது பணி ஜூனியர் டென்னிஸ் துறையை அபிவிருத்தி செய்வது. முதலில் மாவட்ட ரீதியில் டென்னிஸ் விளையாட்டை ஆரம்பித்து ஊக்கப்படுத்துவது முக்கிய கடமையாக உள்ளது.

அடுத்து, திறமையுள்ளவர்களை இனங்கண்டு அவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்குவது; அவர்களுக்கு வெளிநாட்டுப் பயணங்களையும், வெளிநாட்டுப் பயிற்சிகளையும் ஏற்பாடு செய்து கொடுப்பது; வெளி மாவட்டங்களைச் சேர்ந்த இளம் வீரர்களுக்கு கொழும்பில் பயிற்சி கொடுப்பது; அவர்களுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங் களை வழங்குவது; இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் போட்டிகளை ஒழுங்குபடுத்துவது; இலவச பயிற்சி முகாம்களை நடத்துவது போன்றன பிரதான திட்டங்களும் நோக்கங்களும் ஆகும்.

**:- வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 'டென்னிஸ்' துறை எவ்வாறு காணப்படுகின்றது?**

:- இப்போதைக்கு வடக்கு-கிழக்கு மாகாணம் தொடர்பாக பெரிய அளவில் கவனம் கொண்டுள்ளோம். மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் ஏற்கெனவே டென்னிஸ் உண்டு. தற்போது வவுனியா, திருகோணமலை மாவட்டங்களில் டென்னிஸ் விளையாட்டை ஊக்கப்படுத்தவுள்ளோம். ஏற்பாடுகளை ஏற்கனவே தொடங்கிவிட்டோம்.

**:- மட்டக்களப்பு மாவட்ட நிலைமை எவ்வாறு உள்ளது?**

:- அங்குதான் மிகத்திறமையான வீரர்கள் உள்ளனர். குறிப்பாக பன்னிரெண்டு வயதிற்குட்பட்ட வீரர்கள் மிகச்சிறப்பானவர்கள். அவர்கட்கு 'Advance Coach' கொடுக்க எண்ணியுள்ளோம். மட்டக்களப்பு வீரர்கள் தலைநகர் வீரர்கட்கு மிகவும் சவாலாக உள்ளனர். (குறிப்பு: அண்மையில் நடைபெற்ற பாடசாலை அணிகட்கான டென்னிஸ் போட்டியில் மட்/புனித மிக்கேல் கல்லூரி அணி தங்கப்பதக்கத்தையும் (11 வயது பிரிவு) பிராந்திய அணிகட்கான போட்டியில் 12 வயதுப்பிரிவில் மட்டக்களப்பு மாவட்டம் ஆண்கள் பிரிவிலும், பெண்கள் பிரிவிலும் வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது)

**:- டென்னிஸ் விளையாட்டினைச் 'செலவுமிக்க விளையாட்டு' (Expensive game) என்று சொல்வார்களே! அதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

:- அது மிகவும் தவறான அபிப்பிராயம். எப்பிள்ளையும் அதனை விளையாடலாம். அதனைத் தவறான அபிப்பிராயம் எனக் காட்ட நாம் முழுமுயற்சி எடுத்துள்ளோம்,

**:- உங்களுக்கு டென்னிஸ் விளையாட்டில் எப்படி ஈடுபாடு உண்டானது?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

:- நான் எனது ஆரம்பக் கல்வியை மட்/ கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் ஆரம்பித்தேன். பின்னர் 6ம் வகுப்பு தொடக்கம் மட்/புனித மிக்கேல் கல்லூரியில் கற்றேன். அங்கு வைத்து பதின்மூன்று வயதில் 'றக்கட்'டினை தூக்கினேன். தொடர்ந்து பாடசாலை அணிக்காக விளையாடினேன்.

**:- பின்னர் பயிற்றுவிப்பாளராக எவ்வாறு மிளிர்ந்தீர்கள்?**

:- ஆரம்பத்தில் புனித மிக்கேல் கல்லூரிக்கு துணைபயிற்றுவிப்பாளராகப் பணியாற்றினேன். பின்னர் 2000ம் ஆண்டில் 'லேக்வியூ டென்னிஸ் கழகத்தின்' (மட்டக்களப்பு) பயிற்றுவிப்பாளராகக் கடமை புரிந்தேன். 2002ம் ஆண்டு நீர் கொழும்பு மாவட்டத்தில் பிராந்திய பயிற்றுவிப்பாளராக நியமனம் பெற்றேன். 2004ம் ஆண்டில் 'இலங்கை டென்னிஸ் சம்மேளனத்தின்' வெளிப்பிராந்திய அபிவிருத்திப் பயிற்றுவிப்பாளராகவும் (Out Station Development Coach) தொடர்ந்து தேசிய ஒருங்கிணைப்பாளராகவும் கடமை புரிகின்றேன்.

**:- உங்கள் எதிர்கால இலக்கு என்ன?**

:- டென்னிஸ் விளையாட்டை இலங்கையில் மிகவும் பிரபல்யமான விளையாட்டாக மாற்ற வேண்டும். இலங்கையணியில் தகுதியான எவரும் பிரதிநிதித்துவம் செய்யவேண்டும். 'டேவிஸ் கிண்ண'ப் போட்டியில் பங்கு கொள்ளும் அணியின் பயிற்றுவிப்பாளராக வரவேண்டும் என்பது எனது நீண்டகாலக் கனவு.

**:- டென்னிஸ் தொடர்பாக நீங்கள் சொல்ல விரும்பும் அறிவுரை என்ன?**

:- பெற்றோருக்கு!

பிள்ளைக்கு ஈடுபாடான துறையில் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். இதனைப் பெற்றோர்களும், ஆசிரியர்களும் இனம் காணவேண்டும். இல்லாவிட்டால் நாம் ஒரு முரளிதரனையோ, சுசந்திக்காவையோ சந்தித்து இருக்கமுடியாது.

பிள்ளைகட்கு!

இதயசுத்தியுடன் விளையாட்டில் ஈடுபடவேண்டும். கடவுள் பயம் வேண்டும், சத்துள்ள சாப்பாடு சாப்பிட வேண்டும், கல்வியிலும் கவனம் செலுத்தவேண்டும்.

**- ஆழியோன் -**

## சிறப்பாக நடந்து முடிந்த உலக இளையோர் மகாநாடு

அண்மையில் ஜெர்மனியில் நடந்து முடிந்த சர்வதேச கத்தோலிக்க இளைஞர் விழாவில் 193 நாடுகளின் இளையோர்கள் பங்கேற்றனர் என்று கூறிய ஜெர்மனி நாட்டு கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் கர்தினால் லக்போன், திருத்தந்தை ஜெர்மனிய மக்களின் இதயங்களைக் கொள்ளையடித்தார் என்றும், இது மிக அவசியமான ஒன்று என்றும் பெருமிதமடைந்தார். வத்திக்கான் வானொலிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு கூறிய கர்தினால் மேலும் எதிர்பார்த்ததை விட மிகவும் சிறப்பாக நடைபெற்றது என்றும் மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளதாகவும் தெரிவித்தார். இந் நிகழ்ச்சி ஜெர்மனித் திருச்சபையிலும், உலக திருச்சபையிலும் மாபெரும் பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது என்றும் கர்தினால் லக்போன் கூறியுள்ளார்.

## புதிய திருத்தந்தையைக் குறித்து மூன்று முத்திரைகள்

திருத்தந்தை 16 வது பெனடிக்ற் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவராகத் தெரிவுசெய்யப் பட்டதைக் குறிக்கும்முகமாக மூன்று முத்திரைகளை வத்திக்கான் வெளியிட்டுள்ளது. இம் முத்திரைகளில் திருத்தந்தையின் தெரிவு நடைபெற்ற தினம் குறிக்கப்பட்டுள்ளதோடு எங்களுக்கு ஒரு பாப்பரசர், நீர் பீற்றர், உரோமாபுரியின் ஆயர் போன்ற வாசகங்களும் குறிக்கப்பட்டுள்ளன. திருத்தந்தையின் படமும் அதில் பொறிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விசுவாச வாழ்வைச் செயற்படுத்தல்.

**தந்தையே நீர் என்னுடையவர் நான் உம்முடையவன்:**

முதன் முதலாக நீல் ஆம்ஸ்ரோங் எனும் மனிதன், சந்திரனில் காலடி எடுத்து வைத்தான். “கடவுளே, உமது மகிமையைக் கண்டேன். இவ்வளவு அழகிய உலகை எமக்குத் தந்து, எமக்குக் காட்டிய அன்புக்கு நன்றி” என அவர் கடவுளைப் புகழ்ந்தார்.

கடவுள் மனிதரைத் தம் சாயலாகப் படைத்து, அறிவைக் கொடுத்துப் படைப்பை விருத்தி செய்யும் பொறுப்பை அவர்களிடமே ஒப்படைத்துள்ளமை, அவர் மனிதர் மீது காட்டும் அளப்பரிய அன்பையே குறிக்கிறது. கடவுளும் மனிதரிடமிருந்து அன்பையே எதிர்பார்க் கின்றார்.

மீட்பின் வரலாற்றில் இஸ்ராயேலரே இறைமக்களாக இருந்தனர். இதனால் கடவுளுக் கும், தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களுக்குமிடையில் உடன்படிக்கையொன்றுருவானது. “உன் முழு இதயத்தோடும், உன் முழு உள்ளத்தோடும், உன் முழு ஆற்றலோடும், உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக” (இணை: 4-5). அவ்வுடன்படிக்கையை, மனிதன் உயிருடன் இருக்கும் வரை கடைப்பிடிக்க வேண்டு மென்பது இறை சித்தமானது. அதன் பயனாக மக்களுக்கு நலன்கள் கிட்டுமென இறைவன் தெரிவித் தார். இவ்வழைப்பையேற்றுப் பத்துக் கற்பனைகள் மூலம் இறையுறவை வளர்ப்பது மனிதரது பொறுப் பானது.

**உடன்படிக்கையினூடாக நற்பண்புள்ளவராக அழைப்பு:**

நன்மை, அன்பு, கடமை, மனிதாபிமானம் என்பன பாதுகாக்கப்படும் உலகையுருவாக்க நம்மையழைக்கும் இறைவன், தமது வாழ்விலும் அதனை எதிர்பார்க்கிறார். மீக்கா 6:8 இலிருந்து நாமிதையறிகிறோம். பழைய உடன்படிக்கை வாழ்வு சீனாய் உடன்படிக்கையான பத்துக்கற்பனைகள் மூலம் சீராக்கப்பட்டது. இன்று கல்வாரி உடன்படிக்கையும், அன்பின் கட்டளைகளுமே வாழ்வுக்கடிப்படைகளாகின்றன. இயேசு இறை தந்தைக்கு இவ்வுலகிலிருந்தபோது காட்டிய அன்பு, பக்தி ஆகியன எமக்கு முன்மாதிரிகை யாகின்றது.

**படைப்பு படைத்தவரில் தங்கியுள்ளது:**

படைப்பு படைத்தவர்க்கேயாகும். புனித பிரான்சிஸ் அசிசி இயற்கையினூடாக இறைவனை அனுபவித்தார். பழைய உடன்படிக்கை மூலம் மக்களிடம் விசுவாசத்தையேற்படுத்திய இறைவன் இயற்கையைப் பாதுகாத்ததுடன், அதற்குமேலாக மக்கள் இறைபாதுகாப்பில் தங்கியிருக்கவும் செய்தார்.

**இறைவிருப்பத்துக்குப் பணிந்து நடந்த கிறிஸ்து:**

இயேசு தன் தந்தையிடம் கொண்ட ஆழமான அன்புறவுடனும், ஏகத்துவத்துடனும் உலகுக்கு வெளிப்பட்டார். நாசரேத்தில் இயேசுவின் வாழ்வில் நாம் காண்பது, அவர் வாழ்ந்த சூழலில், அவரது மறை பணியில் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்று வதையே. இயேசு ஓய்வுநாளில் செய்த புதுமைகளினால் யூதர் குற்றஞ்சாட்டினர். அவ்வேளை இறைமகனுக்குத் தம் விருப்பப்படி எதையும் செய்யமுடியாது. பிதா எதைச் செய்கிறாரோ அதையே செய்கிறார் என்று இயேசு கூறினார். “எனது நோக்கம் எனது விருப்பத்தை நிறை வேற்றுவதன்று. என்னை அனுப்பியவரின் விருப்பத்தை நிறைவேற்றுவதே” எனவும் அவர் கூறியுள்ளார்.

**இறைவனுக்குக் கீழ்படிதல் மூலம் அன்பு காட்டுதல்:**

இயற்கை இறைசித்தப்படி செயற்படுகிறது. எமக்குத் தெரிகிற கோள்கள் நட்சத்திரங்கள் கூட ஒரு ஒழுங்கு முறைக்கேற்ப பயணிக்கின்றன. மனிதனும் படைப்பை விருத்தி செய்ய வேண்டுமென்பது இயேசுவின் வாழ்விலிருந்து வெளிப்படுகிறது. இயேசு இறைத்தந்தையில் அவருக்கிருந்த அன்பினால் மனிதனானார். அன்பின் அடித்தளம் தாழ்ச்சியும் கீழ்ப்படிதலுமாகும். அதனால்தான் இயேசு தன்னுயிரைப் பலியாக்கினார். கிறிஸ்தவர்களாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமும் அன்பின் கட்டளைகளுக்கு முன்னுரிமை கொடுத்து அயலாரையும், இறைவனையும் அன்பு செய்து, அதன்மூலம் பணிவாகவும் வாழவேண்டும். இயேசு தன் வாழ்வில் ஆன்மீக விழுமியங்களையும், பண்பாட்டுப் பெறுமானங்களையும் முன்னெடுத்துச் செல்லும் மாதிரிகையை நாமும் பின்பற்ற வேண்டும். "எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்". (பிலிப்பியர் 2:9) ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீ ழுலகோர் அனைவரும் மண்டியிடுவர். தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக, இயேசுக்கிறிஸ்து ஆண்டவர் என எல்லா நாவுமே அறிக்கையிடும்" (பிலிப்பியர் 2:10.)

இதிலிருந்து நாம் இயேசுவின் கீழ்ப்படிதலைப் பின்பற்றி இயேசுவுக்கும், இறைத்தந்தைக்கும் ஆராதனையும் மகிமையும் செலுத்தவேண்டும் என்பதை அறிய முடிகிறது. நாம் இறைச் சித்தத்தை ஏற்று என்றுமே அதன்படி வாழ்ந்து நற்பயன் பெறவேண்டும்.

*- மெற்றில்டா -*




"வாழ்க்கையை மகிழ்ச்சி நிரம்பியதாக ஆக்கிக் கொள்ள நமக்குத் தேவை மூன்று பொருட்கள். அவை கடவுளின் ஆசி. நல்ல நூல்கள் மற்றும் நல்ல நண்பன்" என்று லாகர்டேர் கூறியுள்ளார். ஒலி நாடாக்களும் தொலைக் காட்சி சாதனங்களும் நாட்டில் புகுந்தபின் படிக்கும் பழக்கம் என்பது ஏதோ ஒரு தற்செயலாக நேர்ந்ததுபோல் ஆகிவிட்டது.

இதனால் நாம் எவ்வளவு இன்பத்தை இழக்கின்றோம். குழந்தைகளாக இருந்த போது தூங்குவதற்கு முன் பாட்டியோ, அத்தையோ, அம்மாவோ ஒரு கதை படிப்பதைக் கேட்கக் காத்திருப்போமே அந்த நாட்களை நினைத்துப் பாருங்கள். இக்காலத்தில் அப்படிப் படித்துக் காட்ட அவர்களுக்கும் நேரமில்லை: குழந்தைகளுக்கும் கேட்கும் ஆர்வமும் இல்லை

இந்நிலை மிகவும் வருந்தத்தக்கது. மேரி வொர்ட்ஸ் மாண்டேகு "படித்துப் பொழுது போக்குவதைப் போன்ற மலிவான பொழுதுபோக்கு வேறொன்றும் இல்லை, அதுதரும் இன்பம்போல் நிலைத்திருக்கும் இன்பமும் வேறில்லை" என்கிறார்.

புத்தகங்கள் மீது எனக்குள்ள காதலால் வீடு முழுவதும் புத்தகங்களும் புத்தக அலுமாரிகளும் காணப்படும். படுக்கை அறை, படிக்கும் அறை, ஏன் குளியலறையில் கூட புத்தக அலுமாரிகள் அமைத்துள்ளேன். தலையணைமீது சாய்ந்து கொண்டு படிப்பது சுகபோகமானது. அந்தச் சுகம் மன்னர்களும் கண்டு பொறாமைப்படக்கூடிய ஒன்று. "என் புத்தகங்களுக்கும், அவற்றைப் படிக்கும் என் ஆர்வத்திற்கும் ஈடாக, மன்னர்களின் மணிமுடிகள் எல்லாவற்றையும் என் காலடியில் வைத்தாலும் நாான் அவற்றை அலட்சியத்துடன் அல்லது வெறுப்புடன் ஒதுக்கிவிடுவேன்" என்றார் 'பெனலன்'. அவருடன் நீங்களும் சேர்ந்து கொள்ளுங்கள். இதுவரை நீங்கள் புத்தகப் பித்தராக இல்லையென்றாலும் இனியேனும் படிக்கத் தொடங்குங்கள். வால்டேர்விஞ் கூறுவது போல் புத்தகங்கள் பெண்களைப்போல. புத்தகங்களை நாம் நம் உடைமையாகக் கொள்ள வேண்டுமே அன்றி அயலாருடையதை இரவலாகப் பெறக் கூடாது. அவற்றைப் படுக்கையில் நம் பக்கத்தில் வைத்துக்கொண்டு மகிழவேண்டும். நீங்கள் திருமணமானவரா? அப்படியாயின் இருவரும் சேர்ந்து படியுங்கள். இப்படிப் படிப்பது அலெக்சான்ரா ஸ்டாடார்ட் கருத்தின்படி உங்கள் இன்பத்தை மிகுதியாக்கும்.

ஃபிரான்சிஸ் பென்னின் கவிதைகளில் எனக்கு மிகவும் விருப்பமான அடிகளைக் கொண்டு படித்தல் பற்றிய என் கருத்துக்களை நிறைவுசெய்கிறேன்.

படிக்கப் படிக்கத் தெய்வீகம் மிகுதியாய்த் தோன்றும். தனிமையை இனிமையாக்கும், சமுதாயப்பிணைப்புத் தரும், மதியைத் தெளிவு செய்யும் நூல்களை விரும்புகிறேன், மதுபானம் அருந்துவோர் மதுவை விரும்புவதுபோல.

- "ஆரோக்கியம் ஆனந்தம் அமைதி" -

**- V.K. *சுப்ரமணியன்.* -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு/மட் மறை மாவட்ட இயக்குனரின் மறைக்கல்வி தினச் செய்தி

இம்மாதம் (செப்டம்பர்) 25ம் திகதி தேசிய மறைக்கல்வி தினமாகும். "மறைக்கல்வியின் இதயம் நற்கருணை" என்னும் தொனிப் பொருளில் சிந்திக்க விளைகின்றோம். மறைக்கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்திராத கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாச வாழ்வின் மேன்மையை உணராதவர்கள் என்றே கூறலாம்.

வருடம் ஒருமுறை மறைக்கல்விதினம் வந்து சென்றாலும் திருச்சபையின் வாழ்வில் மறைக்கல்வியின் அவசியம் இல்லாத நொடியே இல்லையெனக் கூறலாம். விவிலியமும், மறைக் கல்வியும் கிறிஸ்தவ வாழ்வின் முக்கிய பரிமாணங்கள். கிறிஸ்தவ வாழ்வின் தன்மையும் அதன் தரமும் அவரவர் பெற்றிருக்கும் மறைக்கல்வியைப் பொறுத்தது என்றால் அது மிகை யாகாது. ஆழமான விசுவாச வாழ்விற்குத் தேவையானது முறையான மறைக்கல்வியே ஆகும். எனவே தான் சிறுவர் தொடக்கம் முதியோர் வரை ஆண்கள் தொடக்கம் பெண்கள் அடங்கலாக அனைவர்க்கும் மறைக்கல்வி அவசியம் என்பதை உணர்ந்து திருச்சபை பல வடிவங்களிலும், பல நிலைகளிலும் மறைக்கல்வியை ஊட்டுகின்றது. ஏனெனில் இது விசுவாசத்தை வளப்படுத்தவும், வாழ்ந்து காட்டவும் சான்று பகரவும் துணை நிற்கின்றது.

மறைந்த திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் "இக்காலத்தில் மறைக்கல்வி அளித்தல் என்னும் திருத்தூது அறிவுரையில் பின்வருமாறு கூறுகின்றார். "மறைக்கல்வியின் தனிப்பட்ட நோக்கம் இன்னும் தொடக்க நிலையில் உள்ள விசுவாசத்தை இறைவனின் அருள் துணையால் வளர்ப்பதும் நாளுக்கு நாள் உணவூட்டி அதை நிறைவுக்கு இட்டுச் செல்வதுமாகும்" எனவே மறைக்கல்வி ஒருவரை விசுவாசத்தின் நிறைவுக்கு இட்டுச் செல்கின்றது என்பது வெள்ளிடைமலை.

திருச்சபையின் தொடக்க நிலையில் நற்செய்தி முழக்கமே மறைக்கல்வியின் நோக்கமாய் இருந்தது. இயேசுவின் பாஸ்கா மறைபொருளை ஒளியாக எடுத்துரைத்து தந்தை கடவுளுக்கும், மனிதருக்கும் உறவின் பாலமாக நிற்கும் இயேசுக்கிறிஸ்து இறந்து உயிர்த்தார். அவரை நம்பினால் நாமும் நிறை வாழ்வு பெற முடியும் என்கின்ற நம்பிக்கையைத் திருத்தூதர்கள் மறைக்கல்வியாகத் தொடர்ந்து புகட்டினர். இதுவே திருச்சபையின் ஆரம்ப அடிப்படை மறைக் கல்வியாக அமைந்திருந்தது.



அதன்பின் திருச்சபை வரலாற்றில் மறைக்கல்வியின் முறையும் நோக்கமும் மறை உண்மைகளை மையமாக வைத்து திருமறைக் கோட்பாடுகளுக்கு விளக்கம் தருவதுதான் மறைக் கல்வி என்று மாறி பல நூற்றாண்டுகளாக இந்நிலை இருந்து வந்தது. இது சமூக உணர்வுகளையோ, சுற்றுபுறச் சூழலையோ பாதிக்காத வகுப்பறைக் கல்வியாகவே இருந்தது. 2ம் வத்திக்கான் சங்கத்தின் விளைவாக அருட்சாதன வாழ்வில் கிறிஸ்தவர்களை உருவாக் குவதே மறைக் கல்வியின் நோக்கமென மாற்றம் பெற்றது. இக்காலகட்டம் பக்திமான்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்ததால் சமய வாழ்விற்கும், சமூக வாழ்விற்கும் இடையே இணைக்க முடியாத இடைவெளி தோன்றக் காரணமானது.

அதன்பின் வந்த காலப்பகுதியில் இறையாட்சியை இம்மண்ணில் மலரச் செய்யும் நோக்குடன் 2ம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின் வந்த காலங்களில் ஆயர் மன்றமும், கல்வி மகாநாடுகளும், திருத்தந்தையர்களின் திருமடல் களும், சுற்றுமடல்களும் தெளிவான நோக்கத்தை வெளிப்படுத்தின. அதாவது வாழ்வு மைய மறைக் கல்வி என்னும் நோக்கத்தில் திருமறை அறிவையும், விசுவாசத்தையும் சமுதாய மதிப்பீடுகளான அன்பு, நீதி, சமாதானம், சமத்துவம், சகோதரத்துவம் போன்றவற்றோடு இணைந்து காண்பதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்தது. சமய நம்பிக்கையையும், வாழ்க்கை நிகழ்வுகளையும் இணைத்துப் பார்க்கும் நெறியாகத் தோற்றம் பெற்றிருக்கிறது.

நாம் இப்போது மேற்கொள்ளும் மறைக்கல்விப் பணியானது இறைவார்த்தை, இறை அனுபவம், சகோதரத்துவ சமூக வாழ்வு போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக அமைகின்றது. மறைக்கல்வியானது விசுவாச வாழ்வில் முதிர்ச்சியை எய்துவதற்கான பயிற்சி என்பதால் ஒவ்வொரு கிறிஸ்தவக் குடும்பமும் இம்மறைக்கல்வியின் தொடக்கப்பள்ளிகளாக அமைய வேண்டும். அடுத்து பாடசாலைகள் மறைக்கல்வியை நெறி முறை தவறாது அதன் மதிப்பும், மாண்பும் குறையாது அளிக்க முன்வரவேண்டும். அத்துடன் முறைசாரா மறைக்கல்வியாகத் திருப்பலித் திருச்சடங்குகள் ஞாயிறு மறைக்கல்வி, அருட்சாதனத் தயாரிப்பு மறைக்கல்வி, தவக்கால நவநாள் மறைபோதகங்கள் போன்றவையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை. எனவே நற்கருணை ஆண்டின் இறுதிப் பகுதியிலே இருக்கும் நாம் வார்த்தையானவர் மனித உடல் ஏற்று என்றும் எங்களோடு இருக்கும் வண்ணம் நற்கருணையைத் தன் உடன் இருப்பாகத் தேர்ந்துகொண்ட இயேசுக் கிறிஸ்துவை தலை சிறந்த மறைக்கல்வியாளராகப் பின் தொடர் வோம்.

**அருட்தந்தை. ஜூட் ஜோன்சன்,**
**இயக்குனர்,**
**விவிலிய திருவழிப்பாட்டு,**
**மறைக்கல்வி நிலையம் மட்டக்களப்பு.**


*புதிய வெளியீடு!*

# திருமணித்தியால திருவிவிலிய வழிபாடு

(பாகம் -02)

**- அம்புறோஸ் பீற்றர் -**

- நற்கருணை ஆண்டுக்கும், தவக்கால புனித வாரங்களுக்கும் மற்றும் நற்கருணை ஆராதனை களுக்கும் பொருத்தமானது.
- திருவிவிலிய அடிப்படையில் அமைந்த பத்துத் திருமணித்தியால வழிபாடுகள்.
- கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயரின் சிறப்புப் பணி பொறுப்பாளரினால் அச்சிட அனுமதிக்கப்பட்டது.
- விலை ரூபா 100/=
- பெற்றுக் கொள்ள:

  * சென்மைக்கல் ஆர்ட் ஸ்ரூடியோ,
  6810, ஜெம்பட்டா வீதி,
  கொழும்பு - 13

* அருளகம்
மத்திய வீதி,
மட்டக்களப்பு.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் - சமாதானம்

இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஐந்தாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தலுக்கு நாள் குறிக்கப்பட்டுவிட்டது.

தேர்தல் பரப்புரைகள் தொடங்கிவிட்டன. வாக்குறுதிகள் அள்ளி வீசப்படுகின்றன. ஜனநாயகத் தேர்தல் ஒன்றில் காணப்படும் "மதிப்பார்ந்த" அம்சங்கள் இத்தேர்தலிலும் காணப்படும் என்று நாம் நம்பலாம். அவை போலி வாக்குறுதிகள், கள்ள வாக்குப் போடுதல், மோசடிகள், வன்முறைகள். இன்னும்... இன்னும்...

சமாதானப் புறாவாக ஜனாதிபதி பதவியேற்ற சந்திரிகா அம்மையார் தனது பதவிக்காலம் முழுவதும் அந்தச் சமாதானத்துக்காக படையெடுப்புக்கள் நடத்தியும், சமாதான முயற்சிகளைக் குழப்பியடித்தும் இந்தச் சாதனைகளுக்கு இன்னும் ஓர் ஆண்டு கிடைக்காமல் போய்விட்டதே என்ற ஆதங்கத்தோடு கதிரையிலிருந்து இறங்கப்போகிறார்.

அந்தக் கதிரைக்குப் போட்டியிடும் இரண்டு பெரிய கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்களும் இனவாதக் குட்டைக்குள் ஊறிய மட்டைகள்தான். எல்லாத் தலைக்கும் பொருத்தமான குல்லாயாக விளங்கும் 'சமாதானம்' என்ற சொல்லை எல்லோரும் தூக்கிப் பிடித்தாலும் அதற்கு அவர்கள் அகராதியில் வெவ்வேறு அர்த்தங்கள் உண்டு. பதவியைப் பிடிக்கவும் பதவிக் காலத்தை ஓட்டவும், அயல்நாடுகளை ஏமாற்றி உதவிகளைப் பெற்றுக் கொள்ளவும் இந்தச் சமாதானம் என்ற மந்திரம் அடிக்கடி உருவேற்றப்படுவதுண்டு. இலங்கை அரசியலைப் பின்னோக்கிப் பார்த்தால் சமாதானம், சமாதானம் என்று சொல்லிச் சொல்லியே காலத்தை ஓட்டியவர்களும், சமாதானத்தின் பெயரால் கண்ணி வைத்தவர்களும் கருவறுத்தவர்களும்தான் காட்சி தருவர். இன்று அரசியல் பண்பாடேயின்றி பச்சை இனவாதம் பேசும் ஜேவி.பியோடும், ஹெல உறுமயவோடும் கூட்டுச் சேர்ந்துள்ள அரசியல் தலைமைகளோ பெரும்பான்மையைத் திருப்திப் படுத்தி அப்புறம் தமிழர்களைத் திருப்திப்படுத்த விரும்பும் தலைமைகளோ இந்த நாட்டுக்கு என்றுமே சமாதானத்தைக் கொண்டுவரப் போவதில்லை. ஆகவே, இந்தத் தேர்தல் பற்றி, இதில் யார் வெல்வார்கள் என்பது பற்றி அக்கறைப்பட்டு ஆகப்போவது ஒன்றுமில்லை.

பெரும்பான்மை இனம் எதிர்ப்பார்ப்பது சண்டையில்லாத சமாதானம், ஒரே இலங்கை, பொருளாதார மேம்பாடு.

ஆனால் சிறுபான்மை இனங்கள் எதிர்பார்ப்பது நீதியான சமாதானம். சுயநிர்ணய உரிமை, சமத்துவமான, பாதுகாப்பான வாழ்வு.

தேர்தல் விஞ்ஞாபனங்கள் நிறைவேற்றத் துடிப்பது எல்லாம் பெரும்பான்மை இனத்தின் எதிர்பார்ப்பைத்தான்.

சிறுபான்மை இனங்கள் தேர்தலைப்பற்றி அல்ல, அதையும் தாண்டி தூரநோக்கோடு சிந்திக்கவேண்டும்.

-மலர்வேந்தன்

## பிரெஞ்சுக் கலை விழாவில் கலந்துகொண்ட திருமலைக் கலைஞர்களுக்குப் பாராட்டுவிழா

எடின்பரோ பொட்டானிக் கார்டனில் நடைபெற்ற பிரெஞ்சுக் கலைவிழாவில் கலந்து கொண்ட திருகோணமலைக் கலைஞர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

செப்டம்பர் மாதம் 25ம் திகதி திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இவ்விழாவுக்கு சட்டத்தரணி கா. சிவபாலன் தலைமை தாங்கினார். திருகோணமலை கலைவாணி நாடகமன்றமும், திருகோணமலை முத்தமிழ் வளர் கலை மன்றமும் இணைந்து இவ்விழாவை ஏற்பாடு செய்திருந்தன.

பிரெஞ்சுக் கலைவிழாவில் கலந்து கொண்ட செல்வி. அமாலி ரங்கே, செல்வன். பிரதீபன் பூபாலசிங்கம், செல்வன். கெங்கேஸ்வரன் வேல்முருகன் ஆகியோரே கௌரவிக்கப்பட்டவராவர். இவர்கள் மேற்குறித்த விழாவில் முதல்முறையாகக் கலந்து கொண்டதோடு தொடர்ந்து 26 நாட்கள் மேடையேறி நான்கு விருதுகளைப் பெற்ற "கடலின் குழந்தைகள்" கலை நிகழ்வில் பங்கு பற்றி திருகோணமலை மண்ணுக்குப் பெருமை தேடித்தந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குருத்துவ வாழ்வில் வெள்ளி விழாக் கண்டார்

தாழங்குடா பங்குத் தந்தை அருள்பணி ஜே. எஸ். மொறாயஸ் அவர்கள் தமது குருத்துவ வாழ்வில் இருபத்துயைந்து ஆண்டுகளை நிறைந்து வெள்ளி விழாக்கண்டார். இதனையொட்டி செப்டம்பர் 20ம் திகதி செவ்வாய்க்கிழமை மட்.முதியோர் இல்லத்தில் நன்றித்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டதுடன் மதிய விருந்தும் இடம் பெற்றது. உறவினர்கள், குருக்கள், துறவியர் மற்றும் நண்பர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். மறை மாவட்ட ஆயர் பேரருள் திரு யோசப் கிங்ஸிலி சுவாம்பிள்ளை அவர்கள் சிறப்பு அதிதியாக வருகை தந்தார் அமைதியும், அடக்கமும் மிக்க அருள் தந்தை அவர்கள் பல பங்குகளில் பணியாற்றியவர் தமது எளிமையான வாழ்வால் எல்லோரையும் கவர்ந்தவர். வங்காலையைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர் தமது பணிவாழ்வைத் திரு. மட். மறை மாவட்டத்துக்கு அர்ப்பணித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அருள் தந்தை அவர்கள் பல்லாண்டு வாழவும் அவர்தம் பணி வாழ்வு சிறக்கவும் வாழ்த்துகிறோம்.

## திருத்தந்தையின் அழைப்பு

கிறீஸ்தவர்கள் அனைவரையும் ஒன்று சேருமாறு திருத்தந்தை அழைப்பு விடுத்துள்ளார். கடந்த செப்டம்பர் மாதம் 5ம் திகதி வத்திக்கான் நகரில் கத்தோலிக்க - ஆர்த்தடாக்ஸ் திருச்சபைகளுக்கான மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டுக்கு அனுப்பிவைத்த செய்தியிலேயே திருத்தந்தை மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளார்

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: "அனைத்துக் கிறீஸ்தவர்களும் ஒன்றாக இணைய வேண்டும். இது தொடர்பான முயற்சிகள் உடனடியாகத் தொடங்கப்படவேண்டும். இந்த முயற்சிகள் தொடரப்படவும் வேண்டும். இதற்கான பேச்சுக்கள் நடைபெற வேண்டும். கத்தோலிக்க ஆர்த்தடாக்ஸ் சபைகளுக்கிடையே ஆயிரம் ஆண்டுகள் இருந்து வரும் கருத்துவேறுபாடுகள் உடனடியாகக் களையப்பட்ட வேண்டும். இதற்காகப் பிராத்தனை செய்யுங்கள். இதுதான் எமது முதல் குறிக்கோள் கிறீஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் அனைவரும் ஒன்று சேரவேண்டும்" என்று திருத்தந்தை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## திருத்தந்தை கண்டனம்

அண்மைக் காலமாக பல நாடுகளிலும் நடத்தப்பட்டு வரும் தீவிரவாதத் தாக்குதல்களுக்குத் திருத்தந்தை 16ம் பெனடிக் மீண்டும் கண்டனம் தெரிவித்துள்ளார். பயங்கரவாதிகள் நடத்தி வரும் தாக்குதல்களால் பெருமளவு உயிரிழப்பு ஏற்பட்டு வருகின்றது. இது மனித இனத்துக்கு எதிரான செயலாகும். இத் தாக்குதல்களால் சொத்துக்களுக்கு நாசமும் ஏற்பட்டு வருகின்றது. பொது மக்களைப் பாதிக்கும் வன்முறைச் செயல்களைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த அறிக்கையில் அவர் வலியுறுத்தியுள்ளார். அண்மையில் லண்டனில் இடம் பெற்ற தொடர் குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து 'கடவுள் பெயரால் கேட்கிறோம், பயங்கரவாதத்தை நிறுத்துங்கள்' எனத் திருத்தந்தை வேண்டுகோள் விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## திரு/ மட். மறை மாவட்டத்தில் தேவ அழைத்தல் தினம்.



இவ்வாண்டில் தேவ அழைத்தல் தின நிகழ்வுகள். திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் மூன்று மறைக்கோட்டங்களிலும் நடைபெற்றன. மூன்று இடங்களிலும் சிறப்புத் திருவழிபாடு, கண்காட்சி, கலை நிகழ்வுகள் மற்றும் போட்டிகள் என பல்வேறு அம்சங்களுடன் தேவ அழைத்தல் தினம் அனுசரிக்கப்பட்டது. குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர். ஆயர் யோசப் கிங்ஸ்லி சுவாம் பிள்ளை அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகைதந்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனக்கோலம்

*R. ஸ்ரான்லி பிரபாகரன்*

## மனிதனும் உணர்வுகளும்: "கோபம்"

மனிதன் உணர்வுகள், சிந்தனைகள், நடத்தைகள் என்பனவற்றை அடிப்படையாக வைத்து இனங் காணப்படத்தக்கவன். உதாரணமாக ஓர் உணவுப் பொருளை எடுத்துக் கொண்டால், அதன் நிறத்தையும், வடிவத்தையும் கண்களால் பார்த்து தீர்மானித்துக் கொள்கிறோம். ஆனால் அதன் சுவையை உணர்வொன் றினாலேயே உள்வாங்கிக் கெள்ள முடியும். அதேபோன்று தான் பார்வைக்கு அழகாகவோ அல்லது அலங்கோல மாகவோ உள்ள மனிதனுள் இருக்கின்ற உணர்வு களை,உணர்வதனாலேயே உள்வாங்கிக் கொள்ள முடியும். இந்த உணர்வுகளுக்குள்ள தனிப் பண்பு என்னவென்றால், உணர்வுகளை நாம், நமக்குள்ளேயே உணர்ந்துகொள்ள வேண்டும். இன்னுமொருவர் விபரித்து விளக்குவதனால் விளங்கிக் கொள்ளக் கூடிய இலகுவானதொரு விடயமல்ல உணர்வுகள். நாம்தான் முதலில் நம் உணர்வுகளை இனங்கண்டு அவற்றின் தன்மை என்ன, அந்த உணர்வுகள் எமக்கு எந்தப் பின்னணியில், எந்தச் சூழ்நிலையில் தோன்றுகின்றன என்பதனை அறிந்துகொள்ள வேண்டும். நாம் எமது உணர்வுகளுடன் தொடர்புடையவர்களாகவும், இலகுவில் அவற்றை இனங்கண்டு கொள்பவர்களாகவும் இருக்க வேண்டும். இப்படித் தம்முடைய உணர்வுகளை இலகுவாக இனங்காண்பவர்களால்தான், உணர்வு களைக் கையாளவும் முடியும், அத்தோடு மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளவும் முடியும்.

மனிதனிடம் பல உணர்வுகள் காணப் படுகின்றன. அவற்றுள் மனிதனை மிகவும் ஆட்டிப் படைக்கின்ற உணர்வுகளுள் ஒன்றுதான் "கோபம்" என்பதாகும். இந்தக் கோபம் கொள்ளல் அல்லது ஆத்திரம் கொள்ளல் என்பவற்றால் தனிமனிதனும், சமூகமும் அழிவுப்பாதை யிலேயே சென்றுகொண்டிருப் பதனால் இன்றைய சூழ்நிலையில் இதனைப் பற்றி ஆழமாக, நடைமுறை வாழ்வுடன் இணைந்து நோக்க வேண்டியுள்ளது.

நாம் கோபம் கொள்வதனால் நமது அமைதியான வாழ்வும், மனநிலையும்தான் பாதிக்கப்படுமேயன்றிப் பயனில்லை. கோபம் கொள்வதனால் எதையாவது சாதித்துவிடலாம் என்று நம்முள் பலர் எண்ணுகின்றார்கள். இவர்களுக்கு கோபம் என்பது மனிதனுள் இருந்து புறப்படுகின்றதொன்றாக அல்லாமல் வேண்டுமென்றே உருவாக்கப்படுவதொன்றாகக் காணப்படுகின்றது. அத்தோடு, தம்முள் இருந்து கிளர்ந்தெழும் கோபத்தின் வசப்பட்டு திக்குமுக்காடும் நிலையையும் பலரில் காண்கின்றோம். கோபம் கொள்கின்ற போது எமது வேறு சிந்தனைகளும், செயல்களும் செயற்திறன் குறைந்து விடுகின்றன. அனைத்தும் கோப உணர்வில் குவிந்து விடுகின்றன. இந்தச் சூழ்நிலையில் சரியான முடிவுகள் எடுக்க முடியாது போய்விடும். மேலும், கோபத்துக்கு ஆட்பட்ட ஒருவரினால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகளும் அக்கட்டத்தில் சரியானது என்றும் கூற முடியாது.

எமது எண்ணத்தையும், ஒரு விடயம் தொடர்பாக அல்லது நபர் தொடர்பாக எமக்குள்ள அபிப்பிராயத்தையும் தெரிவிக்கின்ற ஒரு வெளிப்பாட்டு வடிவமாகவும் கோபம் காணப்படுகின்றது. இத்தகைய இந்த உணர்வு வெளிப்பாட்டு வடிவமானது பல்வேறு தகவல்களை எமக்கு மறைமுகமாகக் கூறுகின்றது. அதாவது கோபம் கொண்டுள்ள ஒருவரினது தேவை, உளநிலை, ஆளுமை எனப்பல்வேறு விடயங்களை நாம் அறிந்துகொள்ள முடியும். அதாவது கோபப்படுகின்ற ஒருவருடன் கலந்துரையாடியும், வேறு வழிகளில் அவரை ஆய்வுக்குட்படுத்தியும் இத்தகைய தகவல்களை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபம் மனித உணர்வுகளுள் ஒன்றுதானே என நினைத்து அதனை அந்த அளவிலேயே விட்டுவிட முடியாது. கோபம் கொள்ளாவிட்டால் அவன் மனித உணர்வு அற்றவன் என்று கூறப்படுவதும் உண்டு. ஆனால், கோபத்தைக் கையாளத் தெரிந்த மாமனிதர்களிடம் கூட இந்தக் கோபத்தின் வெளிப்பாடு குறைவாகக் காணப்படும். எனவே, கோபம் மனிதனிடம் உள்ள பண்பே எனினும் அதனைச் சரியான முறையில் கையாள்வதன் மூலம் ஒரு நிறைவான மனிதப் பண்பினை எமக்குள்ளேயே உருவாக்கலாம்.

கோபப்படுபவர் தீயவர்: கோபம் கொள்ளாதவர் நல்லவர் என்ற பாகுபடுத்தப்பட்ட சிந்தனை நல்லதன்று. ஏனெனில், ஒருவரை இன்னொருவர் சுட்டிக் காட்டிக் குறை கூறும் அளவுக்கு எவரும் நிறைவானவர் இல்லை என்பது உறுதியே. இது உறுதியானது என்று கூறுவதற்கான காரணம் என்னவென்றால் நிறைவை நோக்கி நகரும் எந்த மனிதரும் மற்றவரில் குறை காண்பதில்லை.

கோபம் மனித வாழ்வுக்கு அவசியமற்றது என்பதனை உறுதிப்படுத்த நாம் சில நியாயங்களை முன்வைக்க முடியும். கோபம் மனிதனின் உணர்வுகளுள் ஒன்று என்பது ஒருபுறமிருக்க சமூகப் பிராணியான மனிதனுக்கு இது தீங்காக அமைகின்றது என்பதனையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். இது பின்வரும் வகைகளில் தீங்காக அமைவதைக் காணலாம்.

1. ஒரு தனிமனிதன் என்ற வகையில் தனக்குத் தானே தீங்காக அமைதல்.

2. சமூகத்தில் வாழும் ஏனைய மனிதர்களுக்குத் தீங்காக அமைதல்.

3. சூழலுக்குத் தீங்காக அமைதல்.

நாம் கொள்ளுகின்ற கோபம் நமது அமைதியை நிலைகுலையவைப்பது மாத்திரமல்லாது மற்றவர்களையும் குழப்பி, பாதிப்புக்குள்ளாக்குகின்றது. அதேபோலவே சூழலின் சமநிலையையும் குழப்பி விடுகின்றது. உதாரணத்துக்கு வீட்டுச் சூழலை எடுத்துக் கொள்வோம். கோபத்தின்போது தன்னைத்தானே கட்டுப்படுத்த முடியாத ஒருவர் கோபம் கொண்டு வீட்டுப் பொருட்களை எறிந்து உடைத்து அதனால், அதிர்ச்சி தருகின்ற ஓசைகளை எழுப்புகின்றார்.

கோபம் ஏற்படுவதற்கான காரணம் எவை என்பது பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். அதாவது, அன்றாட வாழ்வில் எமக்கு உண்டாகுகின்ற அனுபவங்களை வைத்துக்கொண்டே இந்தக் காரணிகளைக் கண்டுகொள்வோம்.

1. மனிதன் தன்னளவிலேயே கோபம் உடையவனாக இருப்பதற்குச் சந்தர்ப்பங்கள் உள்ளன. ஏனெனில், உளவியல், சமூகவியல், சமயம் என்பன இத்தகைய தகவல்களை எமக்குத் தருகின்றன. ஒருவரது ஆழ்மனதில் கோபம் தூண்டப்படுவதற்கான பாதிப்புக்கள் இருந்தால், அவருக்கு இலகுவாகவே கோபம் தூண்டப்படும்.

2. புறக்காரணிகளும் கோபத்தைத் தூண்டிவிடக் கூடும். இலகுவாகக் கோபத்தால் தூண்டப் படக்கூடிய நிலையில் உள்ள ஒருவரை ஒரு சம்பவமோ, அல்லது வேறொரு நபரோ கோபத்துக்குத் தூண்டும் வகையில் நடந்து கொள்வதனால் அவர் கோபத்தை வெளிப்படுத்தி புறத்தேயும், அகத்தேயும் பாதிப்புக்குள்ளாகியும், பாதிப்புக்குட்படுத்தியும் அமைதியை இழக்கின்றார்.

எனவே, மேலே சொன்ன தகவல்களை வைத்துப் பார்க்கின்றபோது கோபம் என்கின்ற விடயம்பற்றி நோக்குவதென்பது எமது வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்பது புலப்படுகின்றது. எனவே இதுபற்றி மேலும் பல தகவல்களைப் பெற முயற்சிப்பதோடு, கோபத்தைச் சரியான முறையில் கையாண்டு நலம் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதை சொல்லுங்கள்



குழந்தைகள் கதைகளால் பெரிதும் பாதிக்கப் படுகிறார்கள். கதையின் பாத்திரங்களோடு எளிதில் அவர்கள் ஒன்றிப் போய் விடுவார்கள். அவர்களின் ஆழ்மனதில் இடம்பெறுகின்ற உருவகப் பதிவுகள் காலப்போக்கில், அந்த இலக்கை நோக்கி அவர்களைச் செலுத்தத் தொடங்குகின்றன.

குழந்தைகளை சிந்திக்க வைக்கின்ற சக்தி கதைகளைப் போல வேறு எதற்கும் கிடையாது. சிறுவயதில் கேட்கப்படுகின்ற கதைகள், அது வரலாற்று அனுபவங்களாக இருந்தால் கூட, குழந்தைகளின் மனங்களில் ஆழமாகப் படிந்து எதிர்காலக் கனவுகளை அவர்களிடம் தோற்றுவிக்கின்றன. கொலம்பஸ் சிறுவனாக இருந்தபோது கடல் பயணம் செய்து திரும்புகின்ற மாலுமிகள் சொல்கின்ற கதைகளை மிகுந்த ஆர்வத்துடன் கேட்பாராம். அவருக்குப் பழக்கமான ஒரு மாலுமி, நிஜமாகவும் கற்பனையாகவும் தான் பார்த்த நாடுகளைப் பற்றி சுவாரஸ்யமாக விபரிப்பாராம். சிறுவன் கொலம்பசிடம் கடல்கடந்து புதிய புதிய நாடுகளுக்குச் செல்ல வேண்டுமென்கின்ற ஆசை தோன்றுவதற்கு அதுவே காரணமாயிற்று. கடல் பயண ஆசை அவருக்கு இரத்தத்தில் ஊறிப்போயிற்று. பின்னர், கடல் பயணத்தில் புதுமை செய்யவேண்டும் என்கின்ற வெறியில் இந்தியாவுக்கு கடல் மார்க்கம் கண்டு பிடிக்கப் புறப்பட்டு, அமெரிக்கா என்கின்ற புதிய கண்டத்தைக் கண்டுபிடிப்பதற்கு வழி வகுத்தார்.

### *கதைச் சொல்லித் தூங்க வையுங்கள்*

அதாவது குழந்தைகள் தாங்கள் கேட்கின்ற சுவாரசியமான கதைச் சம்பவங்களை மனதில் ஆழமாகப் பதிய வைத்துக் கொண்டுவிடுகிறார்கள். அவாகள் பெறுகின்ற சிறு பொறிகூட அவர்களுடைய வாழ்க்கையினையே மாற்றி அமைத்து விடக் கூடிய உந்து சக்தியாகவும் ஆகிவிடலாம். எனவே குழந்தைகளைச் சிந்திக்க வைப்பதற்கு கதை சொல்வது ஒரு சிறந்த வழியாகும். குழந்தைகள் எதை ஆர்வமாகக் கேட்கின்றார்களோ அதை மனதில் ஆழமாகப் பதிய வைத்துக் கொண்டு விடுகிறார்கள். கதை கேட்க விரும்பாத குழந்தைகளே கிடையாது. நம்முடைய நாட்டில் தொன்று தொட்டு ஒரு பழக்கம் இருந்து வருகின்றது. அந்தப் பழக்கம் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வருவது வருத்தப்பட வேண்டிய விஷயம். சிறிய குழந்தைகளைத் தாலாட்டுப் பாடித் தூங்க வைப்பதைப் போலவே, விவரத் தெரிந்த பிள்ளைக்கு இரவு படுக்கைக்குச் செல்லும்போது கதை சொல்லித் தூங்க வைப்பது பழக்கம். வீட்டிலுள்ள வயது வந்த பாட்டிகள் சுவாரஸ்யமான கதைகளைச் சொல்லித் தூங்க வைப்பார்கள்.

தூங்குவதற்கு முன் கதை சொல்வதற்கு விசேஷமான முக்கியத் துவங்கள் உண்டு. கதைச் சம்பவங்களைக் கேட்டுக்கொண்டே குழந்தைகள் தூங்குவதால், அதனது மனதில் இரவின் தூக்க அமைதியில் அந்தச் சம்பவங்கள் ஆழமான பதிவுகளைப் பெற்று விடுகின்றன. ஆழ்மனப் பதிவுகளே கனவுகளாக வருவதுமுண்டு. கனவு காணாதே என்று சிலர் எச்சரிப்பதை நீங்கள் பார்த்திருக்கலாம். உண்மையாக நடக்குமென்றே நினைக்காதே என்கின்ற அர்த்தத்தில் அது சொல்லப்படுகிறது. உங்கள் கனவுகள் ஆழ் மனக் கனவுகளாக இருந்தால் அது நிச்சயம் நடக்கும் என்பதுதான் பொருள். ஆழ்மனப் பதிவுகள் சக்தி படைத்தவை. வாழ்க்கையை இயக் குகின்ற அளவுக்கு சக்தி படைத் தவை. சொல்லப்படும் கதைகள் ஆழ்மனப் பதிவுகளாகி செயல்பட வேண்டும் என்கிற நோக்கத்திலேயே, தூங்க வைப்பதற்காகக் குழந்தைகளுக்கு கதை சொல்கின்ற பழக்கம் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சாதனைகளை உருவாக்கும்

கதை கேட்கின்ற குழந்தைகள் கற்பனைகளை வளர்த்துக் கொள்கின்றன. கேட்கின்ற கதைகளை ஒட்டி, குழந்தைகள் புதிய கற்பனைசெய்வது ஒரு நல்ல பழக்கம். எந்த சாதனையும் முதலில் கற்பனையாகத்தான் மனதில் உருவாகிறது. அந்தக் கற்பனை அழுத்தம் பெறுகிறபோது செயல் வடிவம் எடுக்கிறது. மனக் கோட்டை கட்டுவதுதான் முதல் படி கற்பனை செய்யாமல் நிஜத்தை வடிவமைக்க முடியாது. கட்டடம் கட்டுவதற்கு முன் வரைபடம் போடுவதைப் போன்றதுதான் இதுவும், கதை கேட்கின்ற பழக்கம் குழந்தைகளிடம் கற்பனை செய்ய வைக்கிறது. ஒரு வரைபடத்தை அதுவாகவே வரைந்து விடுமானால், அந்த வரைபடத்தின் அடிப்படையில் நிஜக்கட்டடம் எழும்ப ஆரம்பித்து விடுகிறது. காந்திஜி, சிவாஜி, கொலம்பஸ் ஆகியோரின் வாழ்க்கையிலும் இதுதான் நடந்தது.

சிந்திக்கின்ற சக்தி குழந்தைகளுக்கு இயற்கையாக இருக்கிறது. பெரியவர்கள் இந்தச் சக்தியை அவ்வப்போது தூண்டிக் கொண்டே இருக்க வேண்டும். கதை சொல்வது அதற்கு ஒரு சிறந்த வழி. சிந்திப்பதற்கு ஏதோ ஒரு தளம் வேண்டும். இந்தத் தளத்தை கதை அமைத்துக் கொடுக்கிறது. நெருக்கடிகளும் பின்னல்களும் இல்லாமல் கதை இல்லை. கதையில் நெருக்கடி வருகின்ற கட்டங்களில் அது எப்படித் தீர்க்கப்படப் போகிறது என்கிற ஆர்வம் மட்டும் குழந்தைகளிடம் ஏற்படுவதில்லை. தீர்வு அமைந்தால் எப்படி இருக்கும் என்றும் குழந்தைகள் சிந்திக்கத் தொடங்குகின்றன. தீர்வுகள் பற்றிச் சிந்திப்பது பழக்கமாகி விடுகிறது. கதையில் வரும் கதாப்பாத்திரம் செய்தது சரியா? தவறா என்று குழந்தைகள் தங்களைத் தாங்களே கேட்டுக் கொள்கின்றன. ஒவ்வொரு குழந்தையும் தனக்குள்ளாகவே ஒரு விவாதம் நடத்துகிறது. இதன் விளைவாக சாதக பாதகங்களை சீர் தூக்கிப்பார்த்து முடிவுக்கு வருகின்ற பழக்கம் குழந்தைக்கு ஏற்படுகின்றது. வாழ்க்கைச் சம்பவங்களை பல கோணங்களிலிருந்து பார்ப்பதற்கு குழந்தை கற்றுக்கொள்கிறது. ஒவ்வொரு கதையும் ஒரு வாழ்க்கை என்பதால் வாழ்க்கை பற்றிய பல்வேறு அனுபவங்களையும் கற்பனையில் பெறுவதற்கு கதை கேட்பது ஒரு நல்ல வாய்பாக அமைந்த விடுகிறது.

### கற்பனை எல்லாம் நிஜமாகுமா?

கற்பனையெல்லாம் நிஜம் ஆகாதுதான். ஆனால் வாழ்க்கை அனுபவம் என்பது என்ன என்று யோசித்துப் பார்க்க வேண்டும். வாழ்க்கையில் நடக்கின்ற சம்பவங்களே அனுபவங்கள் ஆகி விடுவதில்லை. அச்சம்பவங்களிலிருந்து நாம் பெறுகின்ற படிப்பினை தான் அனுபவம். எல்லோருடைய வாழ்க்கையிலும் சம்பவங்கள் நடக்கத்தான் செய்கின்றன. ஆனால் எல்லோருமே அனுபவம் பெற்றவர்களாக ஆகிவிடுவதில்லை. எந்தச் சம்பவத்தைப் பற்றியும் சிந்திக்காவிட்டால் அது அனுபவத்தை ஏற்படுத்தாது.

குழந்தைகள் கதைச் சம்பவங்கள்களைப் பற்றிச் சிந்திக்கின்றபோது அனுபவம் பெறுகின்ற பழக்கம் அவர்களுக்கு வந்துவிடுகிறது. கதையில் பல சம்பவங்கள் குறுகிய கால எல்லைக்குள் நிகழ்ந்து விடுகின்றன. ஒவ்வொரு மனிதனும் மொத்த வாழ்க்கையினையும் வாழ்ந்துதான் அனுபவம் பெற வேண்டும் என்கிற அவசியமில்லை. பல கதைகளை கேட்டுச்சிந்திக்கின்ற போது, பல்வேறு வாழ்க்கையின் அனுபவங்கள் குழந்தைக்குக் கிடைத்துவிடுகிறது. அதனால் பிற்காலத்தில் அவர்கள் வாழ்க்கையில் நடக்கின்ற சம்பவங்களை அனுபவமுதிர்ச்சியோடு அவர்களால் அணுக முடிகிறது. தவிர, கதைகளில் வரும் சம்பவங்களை, விலகிநின்று அவர்களால் விமர்சித்து பார்க்க முடியும். இதில் கிடைக்கின்ற படிப்பினையினை நிஜவாழ்க்கைச் சம்பவங்களோடு அவர்களால் பொருந்திப்பார்க்கமுடியம்.

குழந்தைகளுக்குக் கதை சொல்வது மிகவும் பயனுள்ள பழக்கமாகும். அவர்களைச் சிந்திக்கத் தூண்டுகிற சிறந்த உபாயம் இது. எனவே உங்கள் குழந்தைகளுக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் கதை சொல்வதை ஒரு பழக்கமாக்கி கொள்ளுங்கள். கதைதான் என்றில்லை, சுவாரஷியமான உங்க ளுடைய அனுபவங்களைக் கூடக் கதை போலாக்கி அவர்களுக்குச் சொல்லலாம், குழந்தைகள் குறுக்குக் கேள்விகள் கேட்டால் பொறுமையாகப் பதில் சொல்லுங்கள்; சிந்திப்பதற்கு அவர்களுக்கு இடம் கொடுங்கள், கதைகள் சொல்வதன் நோக்கமே அதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பொது அறிமுகம்
அ. இருதயநாதன்
M.A.M. Phil. (U.K.)

தொடர் - 2

# வன்முறையற்ற தொடர்பாடலும் வன்முறையும்



இன்று மனித வாழ்வுடன் இரண்டறக் கலந்து விட்ட விடயங்களில் ஒன்றாக வன்முறை காணப்படுகின்றது. தனது வாழ்வை முன்னெடுப்பதற்கோ தனது வாழ்வைக் கொண்டு நடத்துவதற்கோ தனக்கேற்ப பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கோ தனது உரிமைகளை நிலைநாட்டுவதற்கோ அல்லது பிறர் உரிமைகளைப்பறிப்பதற்கோ, தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கோ வன்முறை ஓர் ஆயுதமாக அல்லது நடத்தையாக அனேகமானவர்களால் மேற்கொள்ளப்படுகிறது.

வன்முறை உயிர்களுக்கு, அதாவது மனிதன் மற்றும் மிருகம் அனைத்துக்கும் இலகுவாக நடத்தைக்கூடாக வெளிப்படவல்லது. வன்முறையின் தோற்றுவாய் இயல்பூக்கங்களே என உளப்பகுப்பாய்வு கூறுகிறது. இயல்பூக்கங்கள் எனப்படுவன எமக்குள்ளே உள்ள சில இயல்பான உந்து விசைகளினதும் ஊக்கிகளினதும் கலவையாகும். இவையே நாம் செயல்பட எமக்குத் தேவையான உள வலிமையையும் உயிர்ச் சக்தியையும் கொடுத்து நாம் செயல்பட எம்மை வலுவாகத் தூண்டுகின்றன. எமது உடல் உள வளர்ச்சிக்கேற்ப விழித்துக் கொண்டு எம்மைச் செயல்படவைக்கின்றன; அல்லது ஆட்டிப் படைக்கின்றன. பாலூக்கம், மகவூக்கம், பொருள் திரட்டூக்கம், குழுவூக்கம் இப்படி ஏராளம் உள்ளன. எமது உயிருடன் கலந்துள்ள இயல்பூக்கங்களில் ஒன்றாகப் போரூக்கம் நிகழ்கின்றது. போரூக்கம் ஒரு சக்தியாக எமது உயிரில் கலந்துள்ளதனாலேயே தோல்விகளில் விழும்போது மீண்டும் நாம் எழுந்து நிற்பதற்கும், எமது சுய கௌரவம் பாதிப்புறும்போது அதனை அனுமதிக்காமல் எமது தன்மானத்தைப் பாதுகாக்கப் போராடுவதற்கும், எமது உரிமைகள் பறிக்கப்படும்போது அதற்கெதிராக கொதித்தெழுவதற்கும் எமது இருப்பியல் கேள்விக்குள்ளாக்கப்படும்போது அதனை நிலைநாட்ட முயல்வதற்கும் நாம் முயல்கின்றோம். போரூக்கம் இல்லையென்றால் நாம் இலகுவில் சோர்ந்துவிடவும் வாழ்வின் பிடிமானங்களை இழக்கவும் எமது வாழ்வின் சூழ்நிலைகள் வழிவகுத்துவிடும்.

அதேவேளை போரூக்கம் எமது வன்முறை உணர்வுகளைத் தூண்டிவிடுவதிலும் பாரிய பங்கு வகிக்கின்றது. எமக்குள்ளே உள்ள ஆரோக்கியமான, வாழ்வுத் தேவையான நேர் உணர்வுகளையும் ஆரோக்கிய நடத்தைக் கோலத்தையும் சிதைத்து விடுகிறது. இன்று மனித சமூகம் எதிர்நோக்கும் பாரிய பிரச்சனையாக "அழிவுச் சிந்தனையும் அழிவு நடத்தையும்" மனிதர்களிடையே வலுப்பெற இப்போரூக்கம் உள்ளிருந்து உதவுகிறது.

வன்முறை பற்றிய ஆய்வில், வன்நடத்தை என்பது ஒரு கற்றல் பண்பே தவிர எம்முள் பதிக்கப்பட்ட தொன்றல்ல எனக் காண்கிறோம். போரூக்கம் எமக்குள் இருந்தபோதிலும் வன்முறையை நாம் பொதுவாக நடத்தையாக வெளியில் இருந்தே கற்றுக் கொள்கின்றோம். எமது பெற்றோர், பாடசாலை, சூழல், தொடர்பூடகங்கள், சமூகம் இப்படி ஏராளமான வெளிக்காரணிகள் எமக்கு வன்முறை நடத்தையை மிக லாவகமாகக் கற்றுத் தருகின்றன. அத்துடன் வன்முறை மிகவும் சக்தி வாய்ந்தது. எமக்கேற்படும் அனைத்துப் பிரச்சினைகளையும் சுலபமாகத் தீர்க்க வன்முறை சிறந்த சாதனம் என்ற மனநிலையையும் எம்முள் உருவாக்கி விடுகின்றது. எனவே சுருங்கக்கூறின் பிறப்பினால் நாம் வன்முறையாளர்களாகப் பிறப்பதில்லை. மாறாக, எமக்கு வெளியில் இருந்தே வன்முறை நடத்தைகளை பெற்றுக் கொள்கிறோம் அல்லது கற்றுக் கொள்கிறோம். வாழ்வின் சூழ்நிலைக்கேற்ப அதனைப் பயிற்சிசெய்து புலமை மிக்கவர்களாவதுடன் எமது ஆளுமைக்குள்ளும் உள்வாங்கி சிந்தனை, சொல், செயல் அனைத்திலும் வன்முறை வெளிப்பட அனுமதிக்கிறோம்.

இன்று எம்மிடையே வன்முறை எத்துறைகளுக்கூடாக வெளிப்படுகிறதென்பதை உற்று நோக்கினால், அது தொட்டு வராத துறைகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை எனலாம். எமது வாழ்வில் எல்லா நிலைகளிலும், மட்டங்களிலும் பரவி ஊடுருவி இருப்பதைக் காணலாம்.

வன்முறை என்பது உயிருக்கோ, உடலுக்கோ, உள்ளத்துக்கோ, உடமைக்கோ சேதம் விளைவிப்பது அல்லது ஊறு விளைவிப்பது அல்லது அழிவை ஏற்படுத்துவது ஆகும். அத்துடன் வன்முறை பொதுவாக அக வன்முறை, புற வன்முறை என இரு வகைப்படும். அக வன்முறை என்பது ஒருவர் தனக்குத் தானே செய்யும் வன்முறையாகவும் புற வன்முறை என்பது ஒருவரோ பலரோ மற்றவர் மீது புரியும் வன்முறையுமாகும்.

அக வன்முறை என்பது தனது உடல், உள ஆரோக்கியத்தைக் கெடுக்கும் அனைத்து மறை நடத்தைகளுக்கூடாகவும் மேற்கொள்ளப் படுகிறது. மது, மாது, தகாத உறவு, புகைத்தல், போதைப் பொருள் பாவனை, தற்கொலை முயற்சி, இப்படி ஏராளம் உள்ளன. அக வன்முறையில் ஒருவர் ஈடுபடக் காரணமானவற்றில் பிரதானமானது தனது உணர்வுகள், தேவைகள், கருத்துக்கள், அபிப்பிராயங்கள் அனைத்தையும் வெளிப்படுத்து வதற்குப் பதிலாக அடக்கி ஒடுக்குவதாகும். எவ்வாறு வெளிப்படுத்துவது என்று நாம் தெரிந்து கொள்ளாத காரணத்தினாலோ அல்லது வெளிப்படுத்த முடியாத அதிகார அடக்குமுறை சூழ்நிலை காரணமாகவோ நாம் எமக்குள்ளேயே எமது உணர்வுகளையும் அதனு டன் தொடர்புபட்ட அனைத்து அம்சங்களையும் அடக்கி, ஒடுக்கி உள்ளுக்குள்ளேயே வெதும்பி, மனம் புழுங்கி வாழ்கின்றோம். இவ் அடக்கி ஒடுக்கல் கொடுக்கின்ற ஒருவித துயர், தொடர்பாடலில், உறவில், சமூக நடத்தையில், வெளிப்படுகிறது.

இத்தகைய வெளிப்படுத்த முடியாத நிலைக்கு எமது கல்வி முறை மற்றும் பண்பாட்டியல்சார் பழக்க வழக்கங்களும் மொழியும் காரணமாகின்றன. "பெரியவர்களுக்கு கனம் பண்ண வேண்டும். அதிலும் குறிப்பாக ஆசிரியர்கள், பெற்றோர், வயது முதிர்ந்தவர்களுக்கு எதிர்த்துப் பேசக் கூடாது, அவர்களது வார்த்தை களுக்குப் பதில் வார்த்தைப் பேசி அவர்கள் மனதை நோகடிக்கக் கூடாது, அவர்களது அனுபவத்தில் இருந்து கூறுபவற்றைக் கேட்டு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்" போன்ற விடயங்கள் இருபக்கத் தன்மை பொருந்தியவை. கீழ்ப்படிதல் என்பது வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்தலுடன் தொடர்பு பட்டது. எனவே வார்த்தைக்கு மறு வார்த்தை பேசாதிருத்தல் என்பது பண்பாட்டியல் சார் நடத்தைக் கூறுகள், இணை மற்றும் கூட்டுச் சமூக வாழ்வுக்கு மிகவும் ஆரோக்கிய மானதாக இருந்த போதிலும் அதன் மறைத் தாக்கங்களும் ஏராளமுள்ளன. இத்தகைய தாக்கங்களில் ஒன்றாகவே நாம் எமது உணர்வுகளையும் அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் தேவைகளையும், இதமாகவும் பக்குவமாகவும் வெளிப்படுத்த முடியாமல் எமக்குள்ளேயே அடக்கி ஒடுக்க முற்படுகின்றோம். தொடர்பாடலில் ஈடுபடும் இரு தரப்புமே இத்தகைய அடக்கி ஒடுக்குத லுக்கும் மனப் புழுக்கத்திற்கும் ஆளாவதால் இதய பூர்வமானதும் முழுமையானதுமான வெளிப் படுத்தலும் பெற்றுக் கொள்ளுதலும் இடம் பெறாமல் போய்விடுகின்றன. இதனால் முழுமை யானதும் நேர்மையானதுமான மன இணைவும் அதனூடான இருபக்கத் தொடர்பாடலும் ஏற்படாமல் இடை வெளியும் வெறுமையும் வரட்சியும் பொருந்திய தொடர்பாடலும் உறவும் ஈற்றில் விளைபொருட்களா கிவிடுகின்றன.


எமது நாட்டின் கல்விச் சூழலை எடுத்துக் கொண்டால், வகுப்பறையில் மாணவர் - ஆசிரியர் தொடர்பு, உறவை எடுத்துக் கொண்டால், அசமத்து வமானதும் அதிகாரத் தன்மை பொருந்தியதுமான நிலையே காணப்படுகின்றது. அனேகமான சந்தர்ப்பங்களில் மாணவர்கள் தமது உணர்வு களையும் தேவைகளையும் அடக்கி ஒடுக்கும் நிலையே கற்றல், கற்பித்தல் சூழ்நிலையில் ஏற்படு கின்றன. ஒழுக்கம், கீழ்ப்படிவு, கனம் பண்ணல் என்ற கருத்துக்களின் அடிப்படையில் தனி மனித உணர்ச்சி வெளிப்பாடு பெரிதாக வரவேற்கப் படுவதில்லை. இருந்த போதிலும், இதமாகவும் ஆரோக்கியமாகவும் தொடர்பாடலைத் தொடரக் கூடிய வகையிலும் எமது உணர்ச்சிகளையும் தேவைகளையும் வெளிப்படுத்தவும் பெற்றுக் கொள்ளவும் வாய்ப்பு உள்ளது.

அவ்வாறே, குடும்ப தொழிலகச் சூழ்நிலையிலும் பல்வேறு அதிகார மற்றும் அசமத்துவ மட்டங்களுக்கிடையில் இதயபூர்வ தொடர்பாடலை அதாவது இதயபூர்வ வெளிப் படுத்தல் பெற்றுக்கொள்ளலை மேற்கொண்டு வன்முறை களைந்து தொடர்பை அதிகரித்து உறவை ஆழப்படுத்திக் கொள்ள முடியும். இவ் வாய்ப்பை செயலுருவம் கொடுப்பதில் வன்முறையற்ற தொடர்பாடல் பெரிய அளவில் உதவுகின்றது. வன்முறை களைதல் பற்றி அடுத்த தொடரில் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கனிகளில் சிறந்த மாங்கனி



மாதா ஊட்டாத சோறை
மாம்பழம் ஊட்டும் என்பது பழமொழி

முக்கனிகளிலே சிறந்தாகப் போற்றப்படும் பழம் மாம்பழம். மாம்பழத்தை அவசரமின்றி நிதானமாகச் சுவைத்து உண்ணுதல் வேண்டும். இதன் மூலம் மாம்பழத்தின் சுவை அருமையை நாம் உணரலாம். இனிப்புச் சுவையுடைய மாம்பழத்தை அளவாகச் சாப்பிடுவதால் மூளைக்கும், இதயத்துக்கும் குடலுக்கும் வலிமை உண்டாகும். நரம்புத்தளர்ச்சிகளை நீக்கும். ஆண்மைக்குறைவு அகலும். மாம்பழத்தை அதிகாலையில் வெறும் வயிற்றில் சாப்பிட நாளடைவில் கைகால்களில் நடுக்கம், பலவீனம், பித்தமயக்கம். நீங்கும். மாம்பழத்தை பொதுவாக அளவாக உண்ணும் போது, கண் நோய், நமைச்சல், நெஞ்செரிவு, கரப்பான், சொறி சிரங்கு போன்ற நோய்கள் அகலும். கண்களில் சதா நீர்வடிதல், கண்சிவந்து காணப்படுதல், கண்களில் வலி, பார்வை மந்தம், கண் எரிவு, கண் பீளை ஆகிய கோளாறுகளுக்கு மாம்பழத்தைத் தொடர்ந்து ஒரு மண்டலம் (40நாள்) சாப்பிட, நாளடைவில் இவையாவும் அகலும். தோலில் காணப்படும் சுருக்கம், மாலைக்கண்நோய் நீங்கும்.

## மாம்பழம் ஒரு டானிக்:

மாம்பழத்தைக் கருவுற்ற பெண்களுக்குக் கொடுங்கள். பிறக்கும் குழந்தைக்கு ஊட்டச்சத்துக் கிடைக்கும். மாம்பழத்தைத் துண்டு துண்டாக நறுக்கி ஒரு கிண்ணத்தில் போட்டு, அதில் தேனை ஊற்றி ஊற வைத்து ஒவ்வொரு துண்டாக எடுத்துச் சாப்பிட நாளடைவில் உடல் உறுப்புகள் யாவும் புத்துணர்ச்சி பெறும். தோல் சுருக்கத்தைப் போக்கி, தோலை வழுவழுப்படையச் செய்யும் சக்தி மாம்பழத்துக்கு உண்டு. பழம் சாப்பிட்டுப் பால் அருந்த நல்ல துக்கமும் ஏற்படும்.

மலச்சிக்கல் தீர மாம்பழம் ஏற்றது. மாம்பழம், திராட்சை, வாழைப்பழம் ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து சாப்பிட்டால் நாளடைவில் நரம்புத் தளர்ச்சி நீங்கும். மூளைக்கு வலிமை ஏற்படும். இதயத்தையும், வயிற்றையும், குடலையும் பலப்படுத்தும் உன்னதமான டானிக் மேற்கண்ட பழக்கலவை. பற்களில் காணப்படும் வலி, ஈறு வீக்கம், பல்லில் சீழ், இரத்தம் வடிதல், பல் அசைவு போன்ற கோளாறுகளுக்கு மாம்பழத்தை நறுக்கி, ஒரு பாகம் பழத்தை வாயில் போட்டு எல்லாப் பற்களிலும் சூழ்ந்து நிற்கும்படி வாயிலேயே 5 நிமிடம் வைத்திருந்து கீழே துப்பிவிடவும். நாளடைவில் குணம் தெரியும். நாள்தோறும் காலை- மாலை உணவிற்குப்பின் மாம்பழத்தில் பாதி அளவு சாப்பிட்டு, இரவு படுக்கைக்குப் போகும் முன் ஆழாக்கு பசுவின் பால் அருந்தி வர வேண்டும். இவ்விதமாக 40 நாட்கள் தொடர்ந்து சாப்பிட, உடலில் நல்ல இரத்தம் விருத்தியாகும். உடல் பலம் பெறும். முகம் வசீகரமாகத் தோன்றும்.

## மாம்பழச்சாறு:

மாம்பழச்சாற்றையும் தேனையும் கலந்து சாப்பிட, வேனற் கட்டிகள் அகலும். மாம்பழச் சாறு வளரும் குழந்தைகளுக்கு ஊட்டத்தைக் கொடுத்து உடல் வளர்ச்சியை ஏற்படுத்தும். மாம்பழச்சாற்றைத் தொடர்ந்து அருந்த, சிறுநீர்ப்பையில் உள்ளகல் கரைந்து சிறுநீருடன் வெளிப்பட்டு விடும். பற்களில் தோன்றுகின்ற பிணிகளும் நீங்கும். தேவையான மாம்பழத் தோலை எடுத்து அம்மியில் வைத்து, அதன் மீது பால் ஊற்றி நன்கு அரைத்து, அரைத்ததை எடுத்துத் தேனுடன் கலந்து சாப்பிட, நாளடைவில் இரத்த சீதபேதி நீங்கும்

- டாக்டர் ஏஆர். என். துரைராஜ் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
**30 - 10 - 2005**




# விவிலியம் கற்போம் - 42

(விடுதலைப் பயணம் 17: 1–16)

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

இஸ்ராயேல் மக்கள் ஆண்டவர் குறித்த ஒழுங்கின்படி சீன் பாலை நிலத்திலிருந்து பயணத்தைத் தொடர்ந்தனர். அவர்கள் ......................... வந்தபோது அங்கு பாளையம் இறங்கினர். மக்கள் குடிக்க அங்கு தண்ணீர் இல்லை. மக்கள் மோசேயிடம் "குடிக்க எங்களுக்குத் தண்ணீர் ......................... என்று கேட்டனர். மோசே அவர்களை ஏன் சோதிக்கிறீர்கள்" என்றார். அங்கு தண்ணீரின்றித் தவித்ததால் மக்கள் மோசேயை எதிர்த்து முறுமுறுத்து "நீர் ......................... எங்களை வெளியேறச் செய்தது எங்களையும், எங்கள் பிள்ளைகளையும் தாகத்தால் சாகடிக்கவா?" என்று கேட்டனர். மோசே ஆண்டவரிடம் "இந்த மக்களோடு நான் என்ன செய்வேன்?" என்று ........................." ஆண்டவர் மோசேயிடம் "நான் ஒரேபில் உள்ள பாறையில் உனக்கு முன் நிற்பேன், நீ பாறையை அடி: மக்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும்" என்றார். அவ்விடம் ......................... என்றும் மெரிபா என்றும் அழைக்கப்பட்டது. பின்னர் அமலேக்கியர் இரபிதிமில் இஸ்ரயேலரை எதிர்த்துப் போரிட வந்தனர். மோசே ......................... நோக்கி "நம் ஆள்களைத் தேர்ந்தெடு. நாளை நீ போய், அமலேக்கியரை எதிர்த்துப் போரிடு. நான் கடவுளின் ......................... கையில் பிடித்தவாறு குன்றின் உச்சியில் நின்று கொள்வேன்" என்றார். மோசே கூறியவாறு யோசுவா செய்யவே, மோசே, ......................... கூர் என்பவர்கள் குன்றின் உச்சிக்கு ஏறிச் சென்றனர். மோசே தம் கையை உயர்த்தியிருக்கும் போதெல்லாம் இஸ்ரயேலர் ......................... அவர்தம் கையைத் தளரவிட்டபோதெல்லாம் அமலேக்கியர் வெற்றியடைந்தனர். மோசேயின் கைகள் தளர்ந்தன. அவர்கள் கையொன்றைப் பின்புறமாக வைக்க அதன்மேல் அமர்ந்தார். அவர் கைகளை இருபுறமும் தாங்கினர். யோசுவா ......................... முறியடித்தார். மோசே "யாவே நிசீ" என்று தாம் பெயர் சூட்டிய பலிபீடத்தைக் கட்டினார்.

**விடைகள்:** **கோலை, யோசுவாவை, ஆரோன், வெற்றியடைந்தனர், இரபிதிம், கொடும், அமலேக்கியரை, எகிப்திலிருந்து, கதறினார், மாசா.**

*(இவ்விளாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவுவை வளர்ப்போம் - 42

(சரியான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. இலங்கை ஜனாதிபதியின் பதவிக்காலம்
(6 ஆண்டுகள், 5 ஆண்டுகள், 12 ஆண்டுகள்)

2. 'ஒரு மொழி இரு நாடு, அல்லது இரு மொழி ஒரு நாடு' என்று பாராளுமன்றத்தில் கூறியவர்
(தந்தை செல்வா, ஜி. ஜி. பொன்னம்பலம், கொல்வின் ஆர். டி. சில்வா)

3. கத்தோலிக்க திருச்சபைத் தலைவரின் தாய் நாடு
(ஜேர்மனி, போலந்து, இத்தாலி)

4. பாரதப் போரில் 'பாஞ்சன்யம்' என்ற சங்கை ஊதி அதிர வைத்தவன்.
(அருச்சுனன், கண்ணன், அசுவத்தாமன்))

5. கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளில் அதிகூடிய விக்கெட்டுகளைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ள வீரர்,
(முத்தையா முரளிதரன், கும்ப்ளே, ஷேன்வோன்)

6. இயல்புப் புணர்ச்சி என்பது
(பூ மலர்ந்தது, பூவைக் கண்டேன், பொற்றோடு)

பெயர் : ..........................................................................

முகவரி : ..........................................................................

..........................................................................

அனுப்பவேண்டிய முகவரி:

விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம் - 42
தொண்டன்
அ.பெ. எண் 44
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவிலியம் கற்போம் - 40 விடைகள்

கடல்நீர்த்திரளை, மரியாம், ஆண்டவருக்கு, சூர் பாலைநிலத்தில், மாராவை, குடிப்போம், மோசே, தண்ணீரும், அக்கறை, கொள்ளை.

## அறிவை வளர்ப்போம் - 40 விடைகள்

1) பில் கிளின்டன்
2) நாயகன்
3) வத்திக்கான் வானொலி
4) 'நிற்க அதற்குத் தக'
5) மார்பு
6) பிரித்தானியா

**போட்டியின் இரண்டு பிரிவுகளுக்கும் முழுமையாகச் சரியான விடைகளை எவருமே எழுதவில்லை. ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி ரூபா. 50/= பரிசு பெறுவோர்.**

- A. மஹிந்தன்
  14/1 A, சின்ன உப்போடை வீதி,
  மட்டக்களப்பு.
- செ. ஜூடித் ஜொய்சி
  15, சரவண வீதி,
  கல்லடி,
  மட்டக்களப்பு.

**பாராட்டுப் பெறுவோர்**

- லோறனஸ் - யேசு
  6/134, சொறிக்கல்முனை,
  சம்மாந்துறை.
- J. தினோஜ்
  20, அதிகார் வீதி,
  மட்டக்களப்பு.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி.** *(ஆ - ர்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

# காற்றில் கலந்துவரும்....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்

## கத்தோலிக்க தமிழ் நிகழ்ச்சிகள்

**கத்தோலிக்க நற்சிந்தனைகள் ~ நேரம் காலை 5.50 மணி.**

**ஒக்டோபர் – 2005**

| | | |
|---|---|---|
| நாள். | 15, 16 ,17, 18, - | லூக்காஸ் அலெக்சான்டர். |
| | 19, 20, 21 - | அருள் தந்தை அந்திரியாஸ் பெர்னான்டோ. |
| | 29, 30, 31, 01 - | அருள் தந்தை ஜே.எஸ். மொறாயஸ். |

**நவம்பர் – 2005**

| | | |
|---|---|---|
| | 02, 03,04 - | அருள் தந்தை அன்ரனி ஜெயராஜ் |
| | 12, 13, 14, 15 - | திருமதி ஜெயரஞ்சி வாஸ். |
| | 11, 16, 17, 18 - | |
| | 26, 27, 28, 29 - | அருள் தந்தை ஜொனத்தன். |

**சிறுவர் உலகம் (சிறுவர் நிகழ்ச்சி) ~ நேரம் மாலை 06.30 மணி**

**ஒக்டோபர் – 2005**

நாள். 25 - நன்றாக வாழ்வோம்- நாடகம். மெற்றில்டா இராஜேந்திரம்

**நவம்பர் – 2005**

08 - புனிதர்களை அறிவோம். போட்டி (பாரதிப்பிரியா)

22 - கதையும் கருத்தும்

**புதிய உலகம் (வளர்ந்தோர் நிகழ்ச்சி) ~ நேரம் மாலை 6.30 மணி**

**ஒக்டோபர் – 2005**

நாள் 23 - நாடகம், உரை, பாடல்கள்.

**நவம்பர் – 2005**

06 - இறை வேண்டுதல், திருச்சபைச் செய்திகள்,
பாடலும் பரிசும் போட்டி, கவிக்குரல், பாடல்கள்

20 - சிந்தனை உரை, விவிலிய நாடகம். பாடல்கள்

நிகழ்ச்சித் தொகுப்பு : *மலர்வேந்தன்*

தொகுப்பு : சமூகத்தொடர்பு நிலையம்
அ.பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org